# முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

—வார இதழ்—

முரசு 5 | 25—4—58 | வெள்ளி | ஒலி 2


## வலை வீசுகிறார்!




"தி. மு. கழகம் என்றாவது ஒரு நாள் காங்கிரசில் சேர்ந்துவிடும்" என்று தேவர் செங்கையில் குறிப்பிட்டார்.

## வைராக்கியம் (சிறுகதை) - பக்கம்-5

## ரஷ்யாவின் ராஜதந்திரம்!

நான் எப்போதும் 'டைரி' எழுத உட்காரும்போது, என் கரங்கள் ஏனோ நடுங்கிக்கொண்டேயிருக்கும்!

'டைரி' எழுதுவதால் என்ன பலன்? என்றோ ஒரு நாள் எவனோ இறந்துவிட்டால், அவனது ரகசியங்களை — அவனைப் பற்றிய முழு விபரங்களை— அவனது உள்ளத்து உணர்ச்சிகளை உலகுக்கு விட்டுச் செல்லும் ஒரே கருவி அந்த 'டைரி' தானே!

அதை நினைப்பேன்...என் கரங்கள் நடுங்கும்!

ஏன்? என்றோ ஒரு நாள் நான் சாகப் போகிறேன்...திடீரென்று மரணம் என்னை விழுங்கப்போகிறது ... என் வயிற்றிலே தோன்றிய உலக மகா வல்லரசுகள் கண்டு பிடித்து சோதனை நடத்துகின்ற அணு சக்தியும், நீர் வாயுக் குண்டுகளுமே என்னை நசுக்கி நாசமாக்கப்போகின்றன...என்ற பயம் என்னை எப்போதும் அச்சுறுத்திக்கொண்டேயிருக்கும்!

ஆகவேதான் என் கரங்கள் நடுங்கும்!

ஆனால், இந்த மாதம் நான் எழுதும்போதோ என் கரங்கள் நடுங்கவில்லை...புது வேகம் பெற்று பூரிப்போடு ஓடுகிறது!

ஏன்? 'இரும்புத் திரை'க்குள்ளேயிருந்து என் காதுகளை எட்டியிருக்கும் ஒரு இன்பச் சேதிதான், காரணம்!

ரஷ்யா விட்ட செயற்கைச் சந்திரன், என்னைப் பலமுறை சுற்றிச் சுற்றி அலுத்து மறைந்துவிட்ட அதிசயத்தைச் சொல்லவில்லை, நான்!

அதைவிட திகைக்கவைக்கும் செய்தி... ரஷ்யா அணு ஆயுதப் பரிசோதனைகளை நிறுத்தி விடப் போகிறதாம்!

—குருஷேவும், ரஷ்ய வெளிநாட்டு அமைச்சரும் இப்படித் தீர்மானித்து விட்டார்கள்!

என் உடலின் ஒவ்வொரு அங்கத்திலும் பரவிக் கிடக்கும் மக்கள் இச்செய்தி கேட்டதும் கிளப்பிய ஆச்சரியப் பெருமூச்சால் என்னைச் சுற்றிலும் காற்றின் அழுத்தம் அதிகமாகிவிடவே, நானே திக்குமுக்காடிப் போய்விட்டேன், கணநேரம் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்!

"...ஒருதலைப் பட்சமாக அணு ஆயுதச் சோதனைகளை நிறுத்த ரஷ்யா செய்துள்ள முடிவை மற்ற மேலை நாடுகள் புறக்கணித்து தங்கள் சோதனைகளை நீடித்து நடத்தினால், உலக மக்களின் அபிப்பிராயம் அவர்களுக்குப் பாதகமாக 10 மடங்கு அதிகரிக்கும் ...ரஷ்யாவின் முடிவினால் ஏற்படும் கீர்த்தி நாம் பார்த்து வரும் அற்பப் புத்தியைச் சுட்டெரித்துவிடும்..."

—என்று இந்தியாவிலிருந்தும் பாராட்டுரை கிளம்பியது ஆச்சாரியார் வாயின் மூலம்! பி. வி. ஜி. விஷயம் முதல் தற்கால உலக அரசியல் நடவடிக்கைகள்வரை அவை எதுவாக இருந்தாலும்கூட அபிப்பிராயம் தெரிவிக்கத் தவறாத ஆச்சாரியார் குருஷேவுக்குப் பாராட்டுரை தருகிறார்!

ஆனால் இதே நேரத்தில், 'யார் இந்த குருஷேவ்?' என்ற வினாவினை நான் எழுப்பத்தான் வேண்டியிருக்கிறது!

"உலகத்திலேயே வெகு ஜன மக்களின் பாராட்டுதலைப் பெற்ற முதன்மையான சமாதானப் பிரியர்" என்று முகமன் கூறுவார்கள், மதிப்பிற்குரிய 'கம்யூனிஸ்ட் காம்ரேட்'கள்! மற்றவர்களும்கூட அதை ஆமோதிக்கவே செய்வர்!

ஆனால் குருஷேவின் இந்தத் திடீர் நடவடிக்கைகளுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு கிடக்கிறது, 'அவர் யார்?' என்ற சிக்கலான கேள்விக்கான விடை!

குருஷேவ் ஒரு முதல்தரமான ராஜதந்திரி! திரை மறைவிலே தீமை புரிந்துவிட்டு, திடீரென்று நல்ல செயல் ஒன்றின் மூலம் அதற்குத் திரையிட்டு மறைத்துவிடும் அரசியல் சூதாடி!

இதோ, என்னுடைய 'டைரி'யின் பழைய ஏடுகளை ஒரு முறை புரட்டுகிறேன், படியுங்களேன்:

குருஷேவும், புல்கானினும் முன்பு அகில உலக விஜயம் செய்தார்களே; ஏன் தெரியுமா? புரட்சிக்குப் பின்னால் ரஷ்யத் தலைவர்கள் இரும்புத் திரையை விட்டுத் தங்கள் முகத்தை முதல் முறையாக வெளியே காட்டுகிறார்கள் — என்று எல்லோரும் வியப்பிலாழ்ந்தார்களே; அந்தச் செயலின் காரணம் என்ன தெரியுமா?

ரஷ்யாவிலே ஸ்டாலினை வீழ்த்தினார் குருஷேவ்! சந்தேகக் குறி தோன்ற விழித்த மக்களின் முன் 'நான் நல்லெண்ணத்துடன் உங்கள் முன் வந்திருக்கிறேன்' என்று புன்னகை வீசிக்கொண்டு பவனி வந்தார். மக்கள் அந்த நிகழ்ச்சியை மறந்துவிட முடிந்தது!

அப்புறம்...?விடுதலை வெறி கொண்டு எழுந்த போலந்து, ஹங்கேரியின்மீது தன் கோர சொரூபத்தைக் காட்டிப் பாய்ந்தார்!

ரஷ்ய ஆதிக்கப் பிடியிலிருந்து வெளியேறத் துடித்த ஹங்கேரியில் ஆதிக்கச் சின்னமாக— அன்றுவரை அவர்களது கடவுளாக விளங்கி வந்த ஸ்டாலினது சிலைகள் சுக்கு நூறாக நொறுக்கப்பட்டன! ஹங்கேரியின் தனியுரிமைக்குப் போராடிய சுதந்திர சுத்த வீரர்களை சுட்டுக் குவித்தது ரஷ்யா!

விடுதலை முரசு தட்டியோர் வீழ்த்தப்பட்ட அந்த சோகச் சரித்திரத்தைக் கேட்ட நாடுகள் அனைத்தும் கொதித்து எழுந்தன!

அதே நேரம்...வான மண்டலத்திலே ரஷ்யாவின் செயற்கைச் சந்திரன் எழுந்தது!

'விபரீதம், விபரீதம்' என்று குமுறிய நாடுகள், 'விந்தை' விந்தை' என்று வாயைப் பிளந்தன!

'விஞ்ஞான வித்தகர்' என்ற பாராட்டுக் குவியல்களுக்கு இடையிலே ஏதேச்சாதிகார குருஷேவ் மறைந்து ஒளிந்து கொண்டார்!

அதற்குப் பின்னர் மற்றுமொரு விபரீதம் நிகழ்ந்தது ரஷ்யாவில்!

குறுந்தாடியும், குறுகுறுத்த விழிகளும் கொண்டு ரஷ்ய மந்திரி சபைத் தலைவராக வீற்றிருந்த புல்கானின் தலை குப்புற கவிழ்க்கப்பட்டார்!

வீழ்ந்துபோன அவரது கௌரவத்தின்மேல் ஏறி நின்று கொண்டார் குருஷேவ்!

மந்திரி சபைத் தலைவர் பதவி—

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பதவி—

இரண்டையும் தானே அபகரித்துக்கொண்ட அவரது நடவடிக்கையைக் கண்டு நாடுகள் அனைத்தும் வியக்கத் துவங்கின!

அந்த இக்கட்டான நேரத்தில் தான்—இந்த 'அணு குண்டு, ஹைட்ரஜன் குண்டு சோதனை நிறுத்தம்'!

•

### இமயமலைச் சாரலில்...

"குருஷேவ் மட்டுமென்ன; நானும்கூடத்தான் பெரிய ராஜதந்திரியாக்கும்"—என்று மார் தட்டிக் கொண்டு முன்னே வருகிறார் பண்டித நேரு!

உள்நாட்டில் குழப்பம்; அதை மறைக்க இமயமலைச் சாரலில் ஓய்வு — இந்த அதியற்புதக் கண்டுபிடிப்பைக் கடைப்பிடிக்கிறார் நேரு!

மாநிலங்கள் அனைத்திலும்

[தொடர்ச்சி பக்கம்—10]

தஞ்சை
மாவட்ட
தி. மு. கழக
3-வது
மாநாடு

1958, மே 10, 11-ம் தேதிகளில்

திருவாரூரில்

நடிப்பிசைப் புலவர்
கே. ஆர். ராமசாமி இன்னிசையுடன் துவங்கும்.

தலைவர்: கே. ஏ. மதியழகன் பி. ஏ.

திறப்பாளர்: ப. உ. சண்முகம் எம். எல். ஏ.

அறிஞர் அண்ணா

பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன்

மற்றும் கழக முன்னணி வீரர்கள் கலந்துகொள்வர்.

முதல் நாள் 10—5—58 சனி இரவு 10 மணிக்கு

மு. கருணாநிதி நடிக்கும்

உதய சூரியன்

நாடகம் நடைபெறும்.

கட்டணம்: 5, 3, 2. பெண்கள் ரூ. 1.

வெள்ளி 25-4-58 சென்னை

# வடநாட்டில் 'குழந்தைகள்!'

"இந்தியா என்பது என்ன?"

"அடர்ந்த காடுகளும்; அதில் யானைகளும் நிறைந்த இடம். அங்கே வாழ்பவர்கள் ஜாலவித்தை காட்டுவதிலும்; மகுடி ஊதி ஆடச் செய்வதிலும் கெட்டிக்காரர்கள்!"

—இப்படிப் பதில் அளிக்கும் பள்ளிக் குழந்தைகள் அமெரிக்காவில் அதிகம் இருப்பதாக சமீபத்தில் அங்கு சில ஆண்டுகள் தங்கியிருந்த ஒருவர் ஒரு பத்திரிகையிலே எழுதியிருந்தார்.

இது ஆயிரக் கணக்கான மைல்கள்தாண்டி அலைகடலுக்கு அப்பாலிருக்கும் அமெரிக்காவில் வசிக்கும் குழந்தைகளது எண்ணம்!

ஆனால் இந்தியாவோ ஒரே நாடு; இமயம் முதல் குமரிவரை ஒரே மக்கள் வாழும் நிலப் பரப்பு—என்று சிலரால் கருதப்படும் இங்குள்ள நிலைமை என்ன?

—அதுவும் அப்படித்தான் இருக்கிறது.

தென்னகத்தைப்பற்றி விந்தியத்துக்கப்பாலிருப்போர் அமெரிக்கக் குழந்தைகளைவிட மோசமாகத்தான் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

—இதுபோன்ற வேடிக்கையான செய்திகளை 'சுதந்திரா' ஆங்கில இதழில், 'விந்தியத்தைக் கடக்க வேண்டும்' என்கிற தலைப்பில் கட்டுரை எழுதியிருக்கும் தோழர் கே. ஏ. அப்பாஸ் தந்திருக்கிறார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு வட இந்தியப் பல்கலைக் கழகமொன்றில் வரலாறு பயின்று கொண்டிருக்கும் ஒரு பட்டதாரியோடு உரையாடல் நிகழ்த்திக் கொண்டிருந்தாராம், அவர்.

அப்போது இந்திய நாட்டு மொழிகளிலே உள்ள கவிதைகளைப் பற்றிப் பேச்சு திரும்பியதாம்.

வல்லத்தோள் மலையாளக் கவி வேந்தர் என்பதை அறியாத அவர் "அந்தப் பெயர் ஒரு மதராஸ் நாட்டிய வகையைக் குறிக்கும்" என்றாராம்.

மகாகவி பாரதியாரைப் பற்றி அவர் கேள்விப்பட்டதே இல்லையாம்.

இன்னும் ஒரு படி மேற்சென்று "மதராசி மொழியில் நல்ல கவிதைகள் இருப்பதாகத் தெரியவில்லையே"—என்றும் கூறினாராம்.

'மதராசி' என்று ஒரு மொழியே கிடையாதே என்று கூறியதற்கு; "அதெல்லாம் தவறு; மதராஸ் மாகாணத்தில் வசிப்பவர்கள் மதராசி மொழியைத்தான் பேசுகிறார்கள்"—என்று அவர் அழுத்தமாக வாதிட்டாராம்.

இதைக் குறிப்பிட்டுவிட்டு; இந்தப் பட்டதாரி மற்ற வட இந்தியர்களைவிட அதிகம் விஷயம் தெரிந்தவர் என்று எழுதுகிறார், தோழர் அப்பாஸ்!

ஆமாம்; அவரே எழுதுகிறார், படியுங்கள்:

"உ. பி., பஞ்சாப் போன்ற மாநிலங்களில் வாழும் பெரும்பான்மையோர் 'மதராசி மொழி' என ஒன்று இல்லை என்பதைத் தெரியாதவர்களாக மட்டுமல்ல; தென் இந்தியாவைப் பொறுத்த வரையில் தாங்கள் உயர்ந்தவர்கள் என்கிற வெளிப்படையான எண்ணமும் கொண்டவர்களாக இருக்கிறார்கள். **விந்தியம் ஆரிய கலாச்சாரத்திற்கும் நாகரிகத்திற்கும் எல்லைக் கோடாக இருப்பதாகவும் — அதற்கப்பால் கருப்புத் திராவிடர்களின் இருண்ட பூமி இருப்பதாகவும் அவர்கள் உணர்வது போல் தெரிகிறது.**"

இப்படி எழுதிவிட்டு; இது ஆரியப் படையெடுப்பிலிருந்தோ; அல்லது சமீபத்தில் டெல்லி இந்தியாவின் தலை நகரமாக நிலை பெற்றதிலிருந்தோ; அதன் விளைவாக வட இந்தியாவில் அரசியல் அதிகாரம் குவிந்ததிலிருந்தோ ஏற்பட்டிருக்கும் உணர்ச்சியாகும் — என்று காரணம் காட்டுகிறார் திரு. அப்பாஸ்.

மேலும் அவர் எழுதுகிறார்:

"நிறையப் படித்த ஆயிரக் கணக்கான வடஇந்தியர்களுக்கு கதக்களி அல்லது பரதநாட்டியத்தைப் பற்றியோ; பாரதி அல்லது வல்லத்தோளைப் பற்றியோ; மதுரை, சோமநாதபுரம் ஆலயங்களிலே உள்ள சிற்பக் கலையைப் பற்றியோ; எம். எஸ். சுப்புலட்சுமி அல்லது ருக்மணி அருண்டேலைப் பற்றியோ: எதுவுமே தெரியாது. வளமான பண்டைய இலக்கியமும், நவீன இலக்கியமும் தமிழிலும் தெலுங்கிலும் இருக்கிறது என்பதும்; மலையாளத்தில் ஒரு தீவிர சிறு கதைப் பாரம்பரியம் இருக்கிறது என்பதும்; எல்லா இந்திய மொழிகளில் உள்ள ஏடுகளைவிட அதிகம் விற்பனையாகும் இலக்கிய ஏடுகள் தமிழில்தான் வெளியிடப்படுகின்றன என்பதும்; புரட்சிகரமான நாடகங்களும் கவிதைகளும் தெலுங்கில் எழுதப்பட்டு வருகின்றன என்பதும்கூட அவர்களுக்குச் சிறிதளவும் தெரியாது...தெற்கில் உள்ள எல்லோரும் கர்நாடக சங்கீதத்தையும், நாட்டியத்தையும் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியாது. கலையை ரசிக்கும் விஷயத்தில் ஒரு சாதாரண தென்னாட்டான் அவனுடைய வட இந்தியச் சகோதரனைவிட அதிகம் தேர்ந்தவனாக இருக்கிறான் என்று நான் சொல்லும்போது அவர்கள் அதை மறுக்கிறார்கள்."

—இதுதான் ஏக இந்தியாவின் ஒரு பகுதியைப்பற்றி இன்னொரு பகுதி தெரிந்து வைத்துக் கொண்டிருக்கும் விஷயங்கள்!

அமெரிக்கக் குழந்தையைவிட மோசமாக இருக்கிறார்கள் வட இந்தியப் பட்டதாரிகள்!

—இந்த நிலையில்தான் வெட்கமில்லாமல் ஏக பாரதப் பல்லவி பாடுகிறார்கள், பரிதாபத்துக்குரியவர்கள்!

இவ்வளவு பேதங்களையும் வைத்துக் கொண்டு; எப்படியும் விந்தியத்தைக் கடந்தாக வேண்டும்—என்கிறார் அப்பாஸ்!

எப்படி?

இந்தோ—சோவியத் கலாச்சாரக் குழு; இந்தோ—சீன தோழமைக் கழகம்—என்பதுபோல தென்னிந்திய—வட இந்தியக் கலாச்சாரக் கழகங்கள் அமைத்து; கலாச்சாரங்களைப் பறிமாறிக் கொள்ள வேண்டும்!

முரண்பட்ட கலாச்சாரம் கொண்ட இரு நாடுகளிடையே சுமுக உறவை வளர்ப்பதற்கு இது போன்ற அமைப்புகள் இருப்பதைத்தான் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்!

ஆனால் ஒரே நாடு; பிரிக்க முடியாத ஒரே அமைப்பு கொண்ட பிரதேசம்—என்று சொல்லப்படுகிற இந்தப் பாரத மக்களிடையே நேசத்தை வளர்க்க அது போன்ற அமைப்புகள் வேண்டுமாம்!

அமைக்கட்டும்; தென்னிந்திய—வட இந்திய தோழமைக் கழகங்கள் பலவற்றை நாடெங்கும் அமைக்கட்டும்!

அப்போதுதான் தென்னிந்தியா வேறு; வட இந்தியா வேறு; அவையிரண்டிற்கும் தோழமை இல்லை—என்கிற அசைக்க முடியாத உண்மைகள் வெளி உலகம் எங்கும் இன்னும் வேகமாக விளம்பரமாகும்!

அப்போதுதான் ஏக பாரதத் தத்துவம் என்பது நடைமுறைக்கு ஒத்துவராத பயங்கரமான கனவு என்பது பட்டவர்த்தனமாகும்!

தோழர் அப்பாசின் அவா நிறைவேறட்டும்; நமது பிரிவினைக் கொள்கையும் பலிக்கட்டும்! ஃ

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தன் கொள்கைகளை மாற்றியிருப்பது, சிங்கத்திற்கு மனிதப் பற்கள் கட்டியதுபோல என்கிறது
—"சங்கர்ஸ் வீக்லி"

# நீங்காத கிரகணம்!

"சூரிய கிரகணத்தன்று நான் பால் அருந்தச் சென்றேன். என் மருமகன் அதைத் தடுத்தான். நான் பால் சாப்பிடுவதற்கும், சூரிய கிரகணத்திற்கும் என்ன சம்பந்தம்? சூரியன், சந்திரன் போன்ற கிரகங்களின் நடவடிக்கைகளில் நாம் மிக்க அக்கரை கொண்டிருக்கிறோமே தவிர, நம்மை மறந்து விடுகிறோம்; நம்மைக் காப்பாற்றிக் கொள்ள மறந்து விடுகிறோம்..."

—சென்னை வந்திருந்த காங்கிரஸ் தலைவர் தேபர், காங்கிரஸ் மாதர்கள் கூட்டத்தில் இப்படி பேருரை நிகழ்த்தி இருக்கிறார்.

திரும்பும் திசை எல்லாம் வெற்றி உலா வந்து கொண்டிருந்த காங்கிரஸ் படகுகளிலே ஓட்டைகள்! உள்ளே பெருகி வழியும் தண்ணீரை வெளியே பாய்ச்ச இரவு, பகல் என்னேரமும் பாடுபடும் காங்கிரசின் பெரும் தூண் — அதற்கென்று சிட்டுக்குருவிபோல் பறந்து பறந்து பணிபுரியும் தேபர் தான் இப்படி வானத்து ஆதவனை நோக்கி வாயைப் பிளந்து வரும் 'ராகு'வைப்பற்றி நமக்கென்ன கவலை என்று பேசியிருக்கிறார்!

சூரியனை விழுங்க வருகிறான் ராகு; விழுங்கிப் பின் விட்டு விடுகிறான் — இது புராணக் கற்பனை!

சுதந்திர ஜோதி சுடர்விடுகிறது என்று பெருமையோடும் பூரிப்போடும் சொல்லிக் கொண்டார்களே; அந்த காங்கிரஸ் ஆதவனையும் இன்று கவ்விக் கொண்டு வருகிறது ஊழல் என்ற நாகம்!

மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் ஆட்சபீடத்திலிருக்கும் காங்கிரசிலே உட் பிளவுகளும், பெரும் ஊழல்களும் திரைகிழிந்து பறைசாற்றப்பட்டு விட்டன!

காங்கிரசின் காவலர்களில் சிலர் 'அது கடமை தவறிவிட்டது; காட்டுவழி ஓடுகிறது, கட்டவிழ்ந்து' என்று குமுறி எழுந்து — குற்றம் சாட்டி — வெளியேறுகிறார்கள்!

'உள்ளே இருந்து கவிழ்க்கச் சதி செய்கிறார்களே; கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுகிறோம்' என்று பலர் துரத்தப் படுகிறார்கள், காங்கிரசின் கூடாரத்திலிருந்து!

"ஐயோ, இந்தக் காங்கிரஸ் முன்பே அழிந்து தொலைந்திருக்கக்கூடாதா?" என்று குமுறி அழுகிறார் தேபர்!

ஆனால், அழிவுப் பாதையிலே வேக வேகமாக ஓடிக் கொண்டிருக்கிற காங்கிரசின் அன்றாட நடவடிக்கைகளினால் — 'சுதந்திரப் போராட்டத்திலே தலைகளை விலையாகத் தந்தோம— அங்கங்களை அறுத்துக் கொடுத்தோம்'—என்று பொறித்துக் கொண்ட பட்டயங்கள் எல்லாம் இன்று மக்கள் மத்தியிலே கேலிக்குரியவைகளாக மாறி விட்டன!

காங்கிரசிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருக்கிறவர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது!

பீகாரிலிருந்து ஐவர்!

இமாசலப் பிரதேசத்திலிருந்து மூவர்!

ஆந்திராவிலும் மூவர்—மூவரும் காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் — கேவலம், அவர்களில் இருவர் மாஜி அமைச்சர்கள்!

இவர்களின்மேல் மேலிடம் சாட்டுகின்ற குற்றச் சாட்டுகள், நடைபெற்ற பொதுத் தேர்தலிலும்—ராஜ்ய சபைக்கான தேர்தலிலும் காங்கிரசுக்கு எதிராக — அதைக் கவிழ்க்கச் சதிசெய்தனர் என்பதாகும்!

இதுமட்டுமல்ல...

ஒரிசாவின் காங்கிரஸ் மந்திரி சபை மரண முகட்டை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறது.

சென்ற 18-4-58 அன்று சர்க்கார் தரப்பு மசோதா ஒன்று ஓட்டுக்கு விடப்பட்டதில் இரண்டே ஓட்டு வித்தியாசத்தில் அது பிழைத்தது!

மறுபடியும் 25-4-58 அன்று வெட்டுப்பிரேரணை ஒன்று ஓட்டுக்கு விடப்பட்டதில் ஒரே ஒரு ஓட்டு வித்தியாசத்தில்தான் தப்பியிருக்கிறது!

இந்த நெருக்கடி நிலைமை காங்கிரசை உதறிய நான்கு சட்ட சபை உறுப்பினர்கள் வெளியேறிவிட்ட காரணத்தால் ஏற்பட்டிருக்கிறது!

"காங்கிரசை சுயநலமிகள் ஆக்கிரமித்துக்கொண்டு விட்டனர். உண்மை சேவைபுரிய வேண்டுமென்ற ஆசை கொண்டவர்களுக்கு அது ஏற்றதல்ல. மானம், மரியாதைகளை இழக்காமல் வெளியேறி விடுவதே நலம்"

—ஒரிசா காங்கிரசிலிருந்து வெளியேறிய எம். எல். ஏ. ஒருவர் இப்படி 'நற்சாட்சிப் பத்திரம்' வழங்கியிருக்கிறார்!

ஒரிசாவில் காங்கிரசின் எதிர்காலம்...ஒரே புகைமண்டலம்!

இப்படி அங்கு கலகலத்துவிட்ட காங்கிரஸ் கோட்டைக்கு முட்டுக் கொடுத்துத் தூக்கி நிறுத்த தன்னுடைய ஜால வார்த்தைகளையே வழக்கம் போல் பயன்படுத்துகிறார் பண்டித நேரு:

"காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கு இங்கு மங்குமாக ஒரு சில தோல்விகள் ஏற்பட்டிருந்தாலும், ஸ்தாபனம் பலஹீனமடைந்து விடவில்லை! எதிர்க்கட்சியினர் காங்கிரசை குறைகூறவே இப்படியெல்லாம் பிரச்சாரம் செய்கிறார்கள்..."

காங்கிரசின் கேடுகெட்ட நிலையினை எடுத்தியம்புகிறவர்களின் மீது 'தப்புப் பிரச்சாரம்' என்ற கண்டனத்தை வீசுகின்ற பண்டிதர், கண்ணுக்கு எதிரிலே தோன்றுகின்ற சீர்குலைவுகளுக்கு என்ன சமாதானம் சொல்ல முடியும்?

உத்திரப் பிரதேசம்-'இந்திய ஆட்சி பீடத்தின் சூத்திரக் கயிறு இயங்கும் இடம்; நாட்டின் பெருந் தலைவர்களை உற்பத்தி செய்து தரும் தொழிலகம்' என்ற பாராட்டுரைகளுக்கு இலக்கான பூமி, காங்கிரசின் 'இரும்பு மனிதர்' ஒருவரை இரண்டாவது முறையாகத் தேர்தலில் கவிழ்த்து விட்டு, காங்கிரஸ் 'செல்லாக் காசா'கி வரும் நிலையை எடுத்துக் காட்டுகிறது.

சந்திரபானு குப்தா என்ற அந்த 'காங்கிரஸ் புலி' சென்ற பொதுத் தேர்தலிலும் தோற்கடிக்கப்பட்டவர்!

மறுபடியும், இப்போது நடைபெற்ற உப தேர்தல் ஒன்றிலும் போட்டியிட்டார். பிரஜாசோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஒரு பெண்மணியிடம் மாபெரும் தோல்வி கண்டார்!

அவரது தோல்வி டெல்லியின் தலைமைக்கு மாபெரும் அதிர்ச்சியைத் தந்திருக்கிறது!

இந்தத் தோல்விக்கு என்ன காரணம் என்று ஆராயப் புகுந்த மேலிடம் 'ஊழல்' என்ற வழக்கமான 'காரணத்தை விடையாகக் கண்டிருக்கிறது! காங்கிரசின் உள்ளே இருந்த பலர் அவருக்கு எதிராக வேலை செய்து—அவரது முகத்திலும், அவர் அங்கம் வகிக்கும் உ. பி. காங்கிரசின் முகத்திலும் கரிபூசி விட்டார்களாம். அவர்கள் மேலும் நடவடிக்கை எடுக்க தீவிர ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இப்படி பக்கத்தில் நின்று குழிப் பறிக்கும் இழிதகைப் பண்பு மட்டுமே இன்றைய காங்கிரசின் அழிவுப் பயணத்திற்குக் காரணம் என்று சொல்லிவிட முடியாது!

டெல்லிப் பெரியார்களின் நிர்வாக லட்சணம் வேறு; மக்கள் மன்றத்திலே அது பெற்றிருக்க வேண்டிய செல்வாக்கை விழுங்கிக் கொண்டு வருகிறது. ஆண்டுதோறும் வெளி வருகின்ற பொதுக் கணக்கு தணிக்கைக் குழுவினர் 'அடுக்குமா இந்த அநியாயம்' எனக் கேட்டு —வரிப் பணமாக மாறுகின்ற மக்களின் வியர்வையும் இரத்த

[12—ம் பக்கம் பார்க்க]

நேரு பதவியிலிருந்து விலகவேண்டும்; காங்கிரசும் பி. சோ. வும் ஒன்றுபட வேண்டும்—என ஜெயப்பிரகாஷ் சொல்கிறார். —'சங்கர்ஸ் வீக்லி'

# வைராக்கியம்

## முல்லை சக்தி

"ட்ரிங்!...ட்ரிங்!..."

'டெலிபோன்' அலறியது!

'டெலிபோன் எக்சேஞ்'சில் இந்த அலறல் சர்வ சாதாரணம்தான் என்றாலும், சத்தத்தைக் கேட்டதும் வேகமாக எழுந்தாள் ஜமுனா!

"என்னடி......அவசர அவசரமா ஓடுறே?" என்றாள் பக்கத்தில் உட்கார்ந்திருந்த அவள் தோழி சரசா என்ற சரசுவதி!

"நான் எதிர்பார்த்த 'கால்'டி இது!......என் தோழி தங்கம் சரியா ஒரு மணிக்கு 'ரிங்' பண்றேன்னு சொல்லியிருந்தா...... அவளாகத்தான் இருக்கும்...!" என்று சொல்லிக் கொண்டே 'போனி'டம் ஓடினாள் ஜமுனா. 'ரிசீவரை' எடுத்தாள். பேசத் தொடங்கினாள்:

"ஹலோ! நான் ஜமுனாதான் பேசறேன்!"

"........."

"நீதானடி? சௌக்கியமா? என்ன அப்படி முக்கியமான விஷயம்?"

"........."

அப்பாகிட்டேருந்து கடிதமா? ...உம் ... என்ன எழுதியிருக்கிறார்?"

"........."

"பழைய பல்லவிதானே? வேறு வேலை என்ன இருக்கு அவருக்கு? கல்யாணம்......கல்யாணம்! அப்பப்பா!...என்ன தொல்லையாப் போச்சு! இந்த பெத்தவங்களே இப்படித்தான், பெண்ணை எங்காவது பிடிச்சித் தள்ளிடணும்னு!

"........."

"ஏண்டி, நான் என்ன பாரமாவா இருக்கேன் அவர்களுக்கு? ...கண்டிப்பா எழுதிடு......நான் சொன்னா சொன்னதுதான்.... என் முடிவை மாத்திக்க முடியாது...! என் வைராக்கியத்தை யாராலும் மாற்றவும் முடியாது ...ஆமாம்!"

"........."

"நீ ஒருத்திடி!...என் நெஞ்சு ஒண்ணும் கல்லுமில்லே! இரும்புமில்லே! 'கான்கிரீட்டு'மில்லே!"

"........."

"வைராக்கியமின்னா வைராக்கியம்தான்!"

'டக்'கென்று 'ரிசீவரை' வைத்தாள் ஜமுனா! அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. வியர்வை முத்து முத்தாக அரும்பியது!

"என்னடி ஜமுனா, யாரது? ஏன் இவ்வளவு கோபம்?" என்று கேட்டுக் கொண்டே வந்தாள் சரசா.

"என்னுடைய தோழி தங்கம் தான்!"

"என்ன விஷயமாம்?"

"எல்லாம் பழைய விஷயம் தான்! நான் கல்யாணம் பண்ணிக்கணுமாம்! அப்பா எனக்கு 'புத்தி' சொல்லச் சொல்லி அவளுக்கு எழுதியிருக்கிறாராம்... !"

"நீ என்ன சொன்னே?"

"அதான் நடக்காது! கல்யாணம் செய்து கொண்டு காலமெல்லாம் கஷ்டப்பட நான் தயாரில்லை—கண்டிப்பாக அவருக்கு எழுதிடு—என் வைராக்கியத்தை மாற்றிக்க முடியாதுன்னு சொல்லிட்டேன்!"

"அது என்னடி வைராக்கியம்? ஐ. ஏ. எஸ். மாப்பிள்ளையைத்தான் கட்டிப்பேன என்றா?" —'மிஸ் கிளியோபாட்ரா' இப்படிக் கேட்டாள். கிளியோபாட்ரா என்பது அவளது இயற்பெயரல்ல; காரணப் பெயர். 'கருப்பி' என்று அழைத்தால் கோபித்துக் கொள்வாளே என்று 'கிளியோபாட்ரா' என்று அழைக்கப்பட்டாள் அவளது தோழிகளால்! கிளியோபாட்ரா காப்பிக் கொட்டை வண்ணம் படைத்த பெண்ணாள் என்பது சரித்திரம் படித்தவர்களுக்கு மட்டும்தானே தெரியும்!

"அப்படி இருந்தாலும் பரவாயில்லையே! கல்யாணமே வேண்டாம் என்கிறாளே!" என்றாள் சரசா.

"ஏண்டி, அப்படியா? இந்தக் காலத்திலே படித்த பெண்களுக்கு இது ஒரு 'பேஷனா'ப் போயிட்டு, கலியாணம் வேண்டாம், கலியாணம் வேண்டாம் என்று!" —அம்பிகாவின் வியாக்யானம் இது.

"அடுத்த மாசம் கல்யாணம் பண்ணிக்கப்போறவ அம்பிகா! அதனாலே அந்த மகிழ்ச்சியிலே இருக்கா!"—சரசா மிக ஏக்கத்தோடு இதைக் கூறினாள்.

"சரசா, ஏண்டி உனக்கு இந்தப் பொறாமை? நீயும் காலா காலத்தில் யாரிடமாவது கழுத்தை நீட்டுறதுதானே!..." என்றாள் அம்பிகா.

"சரசா! இவங்களோடு சேர்ந்து நீயும் கெட்டுப் போகாதே! பெண்கள் வாழ்வில் கல்யாணம் என்பது ஆயுள் தண்டனை! வீடு, கணவன், குழந்தை என்ற சிறைச்சாலையில் ஆண் குலத்திற்கு நாம் எழுதித் தரும் அடிமை முறிச் சீட்டுதான் திருமணம் என்பது!"—ஜமுனா இப்படி முழங்கினாள் மேடைப் பிரசங்கிபோல!

"போதுமடி, போதும்! சரசா, அவள் பேச்சைக் கேட்காதே! திருமணம் என்பது பெண்கள் வாழ்வில் ஒரு இன்பத் திருப்பம்! அதன்பின்தான் அவர்கள் அனுபவ ஆசிரியர்களாக ஆகிறார்கள், குடும்பம் என்கிற பல்கலைக் கழகத்தில்! மேலும், பெண்கள் தங்கள் வாழ்வின் பூரணத்துவத்தை அடைவது தாய்மையில்தானே!" என்றாள் நளினா. அவள் மணம் சென்ற மாதம்தான் நடந்தது.

"ஏண்டி, டெலிபோனில் யாராவது காதல் பைத்தியங்கள் மணிக்கணக்கா பேசிக்கிட்டதை 'ஓவர் ஹியர்' பண்ணினியோ...ஒரே தத்துவமாக கொட்டுறியே!" என்றாள், ஜமுனா கிண்டலாக.

"திருமணம் என்ற சிறைச்சாலையில் புகுந்தவர்கள் வெளியேறத் துடிக்கிறார்கள்; வெளியிலிருப்பவர்கள் உள்ளே நுழைய விரும்புகிறார்கள்!" என்றாள் மேரி.

"ஆமாம்; காதல் வலையில் விழுந்தவளல்லவா நீ; ஆகவேதான் உனக்கு இந்த திரிசங்கு சொர்க்க எண்ணம் உதயமாயிற்றுக்கும்!" என்றாள், 'கான்டினி'லிருந்து அப்போதுதான் திரும்பிய பார்வதம்.

"நீங்கள் எது வேண்டுமானாலும் சொல்லுங்கள்...நான் கல்யாணமே செய்து கொள்ள மாட்டேன்! கல்யாணம் என்றால் என்ன தெரியுமா? 'சனி பிடிக்கிறது' என்று பொருள்! நமக்கென்ன? படித்திருக்கிறோம்; பட்டம் பெற்றிருக்கிறோம்; சம்பாதிக்கவும் செய்கிறோம்; அப்படி இருக்கும்போது!..." — என்றாள் ஜமுனா.

"என்னதான் படித்துப் பட்டம் பெற்றாலும் பெண்கள் குடும்பத் தலைவியாவதுதான் பெருமை! கலித்தொகையிலே ஒரு பாடல் தெரியுமா? அதில்...

'சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என் செய்யும்?'

—கத்தும் கடலில் முத்து பிறக்கிறது; ஆனால் அது அங்கேயே உறங்கிக் கிடந்தால் கடலுக்குப் பயன் இல்லை; அதற்கும் பெருமை இல்லை! ஆரமாக அணியப் பெற்றால்தான் அதற்குப் பயன்; அது பிறந்த கடலுக்கும் பெருமை! அதைப் போலவே மகளிர் பிறந்தகத்திலேயே இருப்பதால், பிறந்தகத்திற்கும் பயன் இல்லை; அவளுக்கும் பெருமை இல்லை! கணவன் மனை புகுந்தால்தான் அவளும் பயன் பெறுவாள்; பிறந்த வீடும் பெருமை கொள்ளும்!... எப்படி மிக அழகாக பெண்கள் மணம் புரிந்துகொள்ள வேண்டியதைப்பற்றி பண்டைய ஆசிரியர் கூறியிருக்கிறார் தெரியுமா?" என்றாள், அங்கு நடந்த வாதங்களைக் கவனித்துக் கொண்டிருந்த கோதை! அவள் அதிக தமிழ் ஆர்வம் கொண்டவள். ஆகவே கலித்தொகையையே சாட்சிக்கு இழுத்து வந்தாள்.

"அதெல்லாம் அந்தக் காலம்! கல்யாணமாவது; கத்திரிக்காயாவது!...உம்...என் வரையில் அது கிடையவே கிடையாது! தூக்குக் கயிறு என் கழுத்தை நெறிக்க வந்தாலும் அனுமதிப்பேன். பொல்லாத மஞ்சள் கயிறு என் கழுத்தைத் தொடவும் விடமாட்டேன்!" என்றாள் ஜமுனா வீராப்போடு!

"அம்மா, கலியுக மணிமேகலை! காவியுடை அணிந்து—அட்சய பாத்திரம் ஏந்தி எங்கேயாவது போம்மா! இந்த 'டெலிபோன் எக்சேஞ்ச்' உனக்கு ஏற்ற இடமில்லை!..." என்றாள் கோதை.

"குடும்பக் கட்டுப்பாடு தேவை என்பதற்கு ஏதேதோ பிரச்சாரம் செய்கிறார்கள் அல்லவா? 'திருமணமே செய்து கொண்டால்தானே குடும்பம்; அதன்பின் குழந்தை; கட்டுப்பாடு எல்லாம்! கல்யாணமே செய்துகொள்ளாமல் இருந்தால் எந்தத் தொல்லையுமே இல்லையல்லவா' என்று நீ பிரச்சாரம் செய்யேன் ஜமுனா!" என்றாள் அம்பிகா!

"எல்லாம் இப்படித்தாண்டி! ஜெயாகூட அப்படித்தானே சொன்னாள்....... திடீரென்று மணம் புரிந்து கொண்டாள்! பெண்கள் வைராக்கியம் என்பது நீர்மேல் குமிழிபோலாகும்! காற்றடைத்த டலூன்; அது எந்த நிமிஷத்திலும் வெடித்து விடும்!" என்றாள் கோதை உதாரணத்தோடு!

[தொடர்ச்சி பக்கம்—8]

"நான் இருந்தால் அந்தக் கிராமத்துக்கே ஆபத்து ஏற்பட்டு விடுமாம். அதற்காக அவசர அவசரமாக என்னை வேறு ஊருக்கு மாற்றியாக வேண்டும் என்று அதிகாரிகள் தீர்மானித்து விட்டார்கள்!" என்றான் அறவாழி.

"பார்த்தா—பிள்ளை, பசு போல இருக்குது! உங்களால் என்ன தம்பி ஊருக்கு ஆபத்து?"—ஆவலோடு கேட்டாள் பூஞ்சோலை.

"ஊரிலே இருக்கிற ஜனங்களையெல்லாம் புத்திசாலிகளாய் இருக்க வேண்டுமென்று நான் கூறினேன். அது, மிகவும் தவறான காரியமாம். சம்பாதிக்கிற பணத்தை வீணே செலவு செய்யாமல் சிக்கனமாக வாழ்க்கை நடத்துங்கள் என்று சொன்னேன்; அது குற்றமாம். எல்லோரும் நாகரீகமாகவும், சுகாதாரமாகவும் நடந்து கொள்ள வேண்டுமென்று பாடுபட்டேன்; அது பாபமாம். அதற்காக என்னை விரட்டிவிட்டார்கள்!"

"அய்யோ! இதெல்லாம் சொன்னா என்ன தப்பு?...அப்படி என்ன தம்பி அந்த ஊருக்காரங்க செலவு பண்ராங்க? குடி ஜாஸ்தியோ?"

"குடியைவிட மோசமான செலவெல்லாம் செய்கிறார்கள். எவனாவது வந்து எதையாவது சொல்லி ஏமாற்றிப் பணம் பறித்துக்கொண்டு போய்விடுவான். ஒரு நாளைக்கு ஒரு கும்பாபிஷேகம் பண்ணுவார்கள். இரண்டு திருவிழா நடத்துவார்கள்!"

"தம்பி, தம்பி, என்னாது? கும்பாபிஷேகம் பண்றதும், திருவிழா நடத்துறதும் மோசமான செலவா? என்னா தம்பி இப்படி சொல்றீங்க? இப்பவுல்ல தெரியுது அந்த ஊர்க்காரன் ஏன் விரட்டினான்னு! அய்யய்யோ... நீங்க சாமிக்கு எதிரியா? அதான் நம்ப கோயில் காளைகூட உங்களை விரட்டியிருக்கு!"

"நான் சாமிக்கு எதிரியில்லம்மா; நான்தான் உண்மையான பக்தன்! சாமி பேரைச் சொல்லி ஊரை ஏமாத்துறானே அவனுக்குத்தான் நான் எதிரி! சாமிக்கு என்மேல் கோபம் கிடையாது. சாமியை வைத்துக்கொண்டு பிழைக்கிறானே அவனுக்குத்தான் என் மீது ஆத்திரம்! உங்க ஊர் கோயில் காளை என்னை ஏன் விரட்டியது? வந்ததும் வராததுமாக அதற்கு என்னைபபற்றித் தெரிந்துவிட்டதா என்ன?"

"ஏன் தம்பி தெரியாது? அது சாமியோட காளையாச்சே! அதுக்கு எல்லாமே தெரியும்!"

"கோயில் காளை என்னை முட்டித் தள்ளியதற்கும், உங்க ஊரிலே இருக்கிறானே, கரகமாடிக் கண்ணன்—அவனுக்கும் நிறைய சம்பந்தமிருக்கிறது."

"யாரு; கரகமாடிக் கண்ணனா? அவனுக்கு என்னா வந்துச்சு உங்கமேல கோபம்? ஓகோ ...சரிதான்! சரிதான்! கண்ணன் பெரிய கரகமாடி!......அதோட அவனுக்குத் தெரியாத தெய்வமே கிடையாது. பெரிய மந்திர வாதியாச்சே அவன்! அவனு கிட்ட போயி நீங்க தகராறு பண்ணலாமோ? அதான் அவன் கோயில் காளைக்கு மந்திரம் போட்டு ஏவி விட்டிருக்கான்."

"அவனுடைய மந்திரமும் தந்திரமும்! எல்லாம் ஏமாற்று வித்தையென்று எங்கள் ஊரிலே நிரூபித்துக் காட்டிவிட்டேன். அதிலே அவனுக்கு ஏற்பட்ட அவமானத்திற்கு வந்ததும் வராததுமாக பழிவாங்கிக் கொள்ளப் பார்த்தான். அவ்வளவுதான்!" என்று அறவாழி சற்று நிமிர்ந்து உட்கார்ந்து பொன்மணியிருந்த திக்கை நோக்கினான். அவள் அங்கேதான் அசையாமல் நின்று கொண்டிருந்தாள்.

அவனுக்குக்கூட தன்னை அந்த ஊரிலிருந்து மாற்றியது நல்லதாகத்தான் போயிற்று என்ற எண்ணம் மின்னி மறைந்தது. அவன் தன்னைப் பார்த்ததும் அவன்மீது படர விட்டிருந்த தன் பார்வையைத் திடீரென்று தரைக்குத் திருப்பிக் கொண்டாள் பொன்மணி. அதையும் அவன் கவனிக்காமல் இல்லை. இன்னும் ஏதாவது பேசிக்கொண்டிருக்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு. அவனது உடல் வலியெல்லாங்கூட ஒதுங்கிக்கொண்டது போன்ற உணர்ச்சி! பூஞ்சோலையம்மாள்

புதிய கேள்விகள் எதுவும் போடமாட்டாளா என்று ஆவலோடு எதிர்பார்த்தான்.

பூஞ்சோலைக்கோ சற்றுக் குழப்பம் ஏற்பட்டது. இவன் என்னமோ புரியாததும், புதியதும், இதுவரை நம்பி வந்த பழமைக்கு விரோதமானதுமான கருத்துக்களைப் பேசுகிறானே என்ற ஆச்சரியத்தில் ஏற்பட்ட குழப்பமே அது. இருந்தாலும் அவளுக்கு அறவாழியின்மீது வெறுப்பு ஏற்படடு விடவில்லை. என்னமோ சின்னப்பிள்ளை—ரத்தத் துடிப்பில் எதுவோ பேசுகிறான் என்று அவனை மன்னித்துவிடத் தயாராக இருந்தாள். அவனது அன்பு ததும்பிய முகம், பூஞ்சோலையம்மாளுக்கு அவன்மீது ஒரு புதிய பாசத்தை ஏற்படுத்தியது.

சுருளிமலை, வழக்கமான அலட்சியத்தோடு அறவாழியின் பேச்சைக் கேட்டானாயினும், அந்தப் பேச்சினிடையே எதையோ ஒரு விஷயத்தை எதிர்பார்ப்பவனைப் போலக் காணப்பட்டான்.

இப்படி அவர்கள் எல்லாம் அறவாழியைப் பற்றி சிந்தித்துக் கொண்டு மௌனமாக இருந்தார்களே தவிர, புதிய கேள்வி எதையும் போட்டு அவன் பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கவில்லை. அறவாழியும் சிறிது நேரம் காத்திருந்தான். பிறகு அவனே தன் பேச்சைத் தொடரத் தொடங்கி விட்டான்:

"உங்கள் ஊர் கண்ணனை எங்கள் ஊரில் அவமானப்படுத்தி விட்டேன் என்றேனே—அதையெப்படி யென்று யாருமே கேட்கவில்லையே; இதோ நானே சொல்லுகிறேன் கேளுங்கள்!" என்று உதட்டில் புன்னகையை வரவழைத்துக் கொண்டு மூவரையும் மாறி மாறிப் பார்த்தான் அறவாழி.

பொன்மணியின் பார்வையிலே ஆவல் நிறைந்திருந்தது. பூஞ்சோலையம்மாள் அவனைப் பார்த்து, "என்னமோ தம்பி—நீங்க சொல்றது அதிசயமா இருக்கு! கண்ணன் பெரிய மந்திரவாதி — அவனைப் போயி நீங்க இப்படிச் சொல்றதுன்னா..." என்று பேச்சை இழுத்தாள்.

"எங்கள் ஊர் ஜனங்களும் இப்படித்தான் அவனைப்பற்றித் தப்புக் கணக்குப் போட்டிருந்தார்கள். நான்கூட அவனைப் பார்த்ததும் இவன் ஏமாற்றுக்காரனாய் இருக்கமாட்டான்; தான் செய்கிற தந்திரங்களை மக்களிடம் விளக்கமாக எடுத்துச் சொல்லித் தன் திறமையை வெளிக்காட்டி ஊதியம் பெறுபவனாகவே இருப்பான் என்று எண்ணினேன். ஆனால், அவன் என்னையும் சேர்த்து ஏமாற்றி விடப் பார்த்தான்" என்று அறவாழி கூறியதும், பொன்மணிக்கு உற்சாகம் தாங்கவில்லை. கரகமாடிக் கண்ணனைப்பற்றித் தான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தையே அறவாழியும் கொண்டிருப்பது அவளுக்குப் பெரு மகிழ்ச்சியைத் தந்தது. கண்ணன், தன் பிரியத்துக்குரிய அறவாழியிடம் எப்படி அகப்பட்டுக் கொண்டான் என்பதை அறிய அவள் துடித்தாள். அதே சமயம் அவளுக்கு வேறொரு பயமும் வந்துவிட்டது. தனக்கும் அறவாழிக்கும் குறுக்கே கரகமாடிக் கண்ணன் வெறும் காமாந்தகாரனாக மட்டுமல்ல; அறவாழியைப் பழிவாங்க நேரம் பார்த்திருக்கும் பகைவனாகவும் நின்று கொண்டிருக்கிறானே யென்பதுதான் அந்தப் பயம்.

## சென்ற இதழில்...

கோயில் காளையால் தாக்கப்பட்டு கீழே கிடந்தவன் யார் என்று தெரியாமலே அவனுக்கு உதவ-காளையை எதிர்க்க ஓடுகிறாள் பொன்மணி. முரட்டுக் காளையின் பாய்ச்சலுக்கு அந்தப் பைங்கொடியும் இலக்காக வேண்டிய நேரத்தில் எங்கிருந்தோ சுருளிமலையின் குழலோசை எழுகிறது. அதைக் கேட்ட காளை நாதத்திலே கட்டுண்டு சிலையாக நின்று விடுகிறது சுருளிமலை அதன் முதுகில் ஏறிக் கொள்ள, பின் சென்று விடுகிறது.

காளையின் தாக்குதலுக்கு இலக்கான வாலிபனை தன் வீட்டிற்குள் எடுத்து வந்து படுக்கச் செய்கிறாள் பூஞ்சோலை! அவனுக்கு சிகிச்சைகள் செய்கின்றனர். பொன்மணி தன் வாழ்வில் முதல் முறையாக அந்த வாலிபனின் அழகில் தன் மனதைப் பறிகொடுக்கிறாள்.

களைப்பால் தூங்கிய வாலிபன் கண் விழிக்கிறான். பிறகு தன் பெயர் "அறவாழி" என்றும், அந்த ஊருக்குப் புதிதாக வந்திருக்கிற ஆரம்ப ஆசிரியன் என்றும் தன்னைத் தானே அறிமுகம் செயது கொளகிறான்.

அறவாழி, கண்ணனைப் பற்றிய கதையைத் தொடர்ந்தான்:

"எங்கள் ஊருக்கு கரகமாடிக் கண்ணன் வரப் போகிறான் என்று பத்து நாட்களாகவே ஒரே பரபரப்பாக இருந்தது. அவனைப் போலக் கரகமாட யாராலும் முடியாது என்று அந்தப் பகுதியிலேயே ஒரே பேச்சு! கிராமத்து மாரியம்மன் கோயிலில் பெரிய திருவிழா! திருவிழாவின் கடைசிநாள்தான் கண்ணனின் கரக ஆட்டம்! உள்ளூர் பெரிய மனிதர் ஒருவர்—மாரியம்மன் கோயில் தர்மகர்த்தா மட்டுமல்ல; ஊரிலேயே அவர் வைத்ததுதான் சட்டம்! அந்த அதிகாரத்தின்படி கண்ணனுக்குத் தங்குவதற்கான இடவசதி எங்கள் பள்ளிக்கூடக் கட்டிடத்திலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நானும் பள்ளிக்கூடக் கட்டிடத்திலேயே ஓர் அறையில் தங்கியிருந்தேன். காரணம், அந்த ஊரில் வேறு வீட்டு வசதியில்லை. தப்பித் தவறி ஒன்றிரண்டு வீடு இருந்தாலும் அவர்கள் கல்யாணமாகாதவர்களுக்கு வீடு தருவதில்லையென்று கூறிவிட்டார்கள். அதனால் நான் பள்ளியிலேயே தங்கிடும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது."

"ஓகோ! உங்களுக்கு இன்னம் கல்யாணமாகலியா தம்பி?" என்று இடைமறித்தாள் பூஞ்சோலை. பொன்மணிக்கு பூரிப்பு பொங்கியது.

அவன், "இல்லை!" என்று அவள் பக்கம் திரும்பிக் கூறிவிட்டு மேலே தொடர்ந்தான்:

"ஊரார் எதிர்பார்த்து ஏங்கியிருந்த கரகமாடிக் கண்ணன், குறிப்பிட்ட தினத்தன்று அதிகாலையிலேயே எங்கள் பள்ளிக்கூடத்தில் வந்து இறங்கினான். அவனது தோற்றம் அவன்மீது எனக்கு வெறுப்பை ஏற்படுத்தவில்லை. நடையுடை பாவனைகளில் கிராமீயம் இருந்தது. பேசும் தோரணையிலும் கிராமீயக் கனிவு தென்பட்டது. சாயங்காலந்தான் அவனுக்குக் கரக ஆட்டம்—அதுவரையில் அவன் பள்ளிக்கூடத்தில்தான் தங்கியிருந்தான். ஊரிலே திருவிழா என்றால் பள்ளிக்கூடம் இருக்கலாமா? அதனால் எனக்கும் நல்ல ஓய்வு! பகற்பொழுதில் நானும் கண்ணனும் பேசிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. பேச ஆரம்பித்த கொஞ்ச நேரத்திற்கெல்லாம் நான் அவன் எப்படிப்பட்டவன் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டேன். மாலையில் கரக ஆட்டத்திற்கு என்னை அவசியம் வரவேண்டுமென்று அழைத்தான். 'அது ஒரு கலைதானே; வந்து பார்க்கிறேன்' என்றேன் நான். 'என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? கலையாவது மண்ணாவது; எல்லாம் கடவுள் சக்தி' என்று வாதிட்டான் அவன்.

"மாலையில் நானும்போனேன் விழா வேடிக்கை பார்க்க! ஊர் மக்கள் அனைவரும் கூறியது போலவே அதி அற்புதமாக கரகக் கலையை அவன் கற்றிருந்தான். தலையில் கரகத்தை வைத்துக்கொண்டு அவன் பம்பரம்போல் சுற்றி ஆடியதை இப்போதும் நான் பாராட்டத் தயாராய் இருக்கிறேன்.

"சுருள் கம்பி சுற்றிக்கொண்டு ஆடினான். மண்டியிட்டுத் தவழ்ந்து தலையிலேயுள்ள கரகத்தை மட்டும் கிறுகிறுவென்று சுற்றிக் காட்டினான்.

"முனை மழுங்கிய கத்திதான்; ஆனாலும் அதன் விளிம்பின்மீது நின்றுகொண்டு போட்டி போட்டு முழங்கிய பம்பைக்கும் உடுக்கு வாத்தியத்திற்கும் அறைகூவல் விடுத்து அவன் ஆடிய ஆட்டம் அனைவரையும் கவர்ந்தது. இன்னும் கண்ணை விட்டகலாத காட்சி!

"இத்துணை சிறப்பு வாய்ந்த கலை விருந்தை அளித்தவன் திடீரென்று ஊர் மக்களை தெய்வ சக்திக்குப் பலியிடத் தொடங்கியபோதுதான் எனக்கும் அவனுக்கும் இவ்வளவு பெரிய பகை மூள்வதற்கான சூழ்நிலை உருவாயிற்று!"

—இதைச் சொல்லிவிட்டு அறவாழி ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டான். அவன் கூறிய வார்த்தைகளில் உள்ள ஆழ்ந்த பொருளை உணர்ந்து கொள்ளாவிட்டாலும் கதை கேட்பதுபோல பூஞ்சோலையும் பொன்மணியும் சுருளிமலையும் அவன் பேச்சைக் கேட்டனர்.

அறவாழிக்கேகூட சந்தேகம் தோன்றியது—யாரோ தன்னையொத்த விஷயமுணர்ந்த பேர் வழிகளிடம் பேசுவதுபோல் பேசுகிறோமே; புரியுமா என்று! இயல்பாக அவனுக்கு எழும் ஆர்வத்தின் விளைவாகவே அந்தப் பேச்சு அமைந்தது.

"ம்!... அப்பறம்?" என்றாள் பூஞ்சோலை.

அடேடே... ஆவலாகத்தானே கேட்கிறார்கள் என்று விட்ட இடத்திலிருந்து தொடங்கினான் அறவாழி:

"கரகமாடிக் கொண்டிருந்த கண்ணன், கடைசியாகக் கோயில் வாசல் வந்ததும் திடீரென தெய்வ ஆவேசம் வந்து ஆடினான். தாமகர்த்தாவும் ஊர்ப் பிரமுகர்களும் அருகே போய் வரம் கேட்டனர். கண்ணன், 'எல்லோருக்கும் கேட்ட காரியம் சித்தி அடையும்' என்று கூறிவிட்டு, இறுதியாக ஒரு பெரிய குண்டு போட்டது போன்ற பயங்கரமான செய்தியை ஊர் மக்களுக்கு நடுவே சொன்னான்....

"இந்த ஊருக்குப் பெரிய கெடுதி செய்ய வேண்டுமென்று மலையாள மந்திரவாதியொருவன் நாலு திசையிலும் தகடு புதைத்திருக்கிறான். அதை உடனே எடுக்காவிட்டால் ஊரே அழிந்துவிடும்!" —இப்படிக் கத்தினான் அவன்.

"உடனே ஊரார் அலறி அடித்துக்கொண்டு 'எப்படியாவது தகட்டை எடுத்து எங்களைக் காப்பாற்று தாயே!' என்று பிரார்த்தனை செய்தனர். பிறகு சாமி மலையேறியது.

"கரகமாடிக் கண்ணன், மலையாள மாந்திரீகர்கள் புதைத்திருக்கும் தகடுகளைத் தானே மந்திரம் போட்டு எடுத்து விடுவதாக உறுதிகூறி அதற்குக் காணிக்கையாக நூறு ரூபாய் வேண்டுமென்றும் கேட்டான். தர்மகர்த்தாவும் காணிக்கை தருவதற்கு சம்மதம் தந்தார். மறுநாள் காலையில் தகடு எடுப்பது என்று முடிவாயிற்று.

"கண்ணன், பள்ளிக்கூடத்தில் வந்து படுத்துக்கொண்டான். கரக ஆட்டத்தைப்பற்றி என்னிடம் விமர்சனங்கூட கேட்டான். நான் மிகவும் புகழ்ந்தேன். அவனுக்கு ஒரே மகிழ்ச்சி! பிறகு தூக்கம் வருகிறது என்று சொல்லி என்னை என் அறைக்கு அனுப்பிவிட்டான். நானும் அறையில் வந்து படுத்தவன், ஏதேதோ நினைத்துக் குழம்பியபடியே தூங்கிவிட்டேன். இரவு இரண்டு மணியிருக்கும். திடுக்கென விழித்துக்கொண்டேன். பிறகு தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தேன். என் அறைப் பக்கம் யாரோ வந்ததுபோல் தெரிந்தது. அசையாமல் படுத்துக்கொண்டேன்.

"'வாத்தியாரே!'—என்று ஒரு குரல்! அது கண்ணனின் குரல்தான்! பேசாமல் படுத்திருந்தேன். கண்ணன் அறையை விட்டு நகர்ந்தான். நான் மெதுவாக எழுந்து வெளியே வந்தேன். கண்ணனைக் காணவில்லை. அவன் படுக்கையில் போய்ப் பார்த்தேன். படுக்கை காலியாக இருந்தது. தெருப் பக்கம் வந்தேன். கண்ணன் தெருவில் போய்க்கொண்டிருந்தான்...எனக்கு அவனைத் தொடர்ந்து செல்ல வேண்டும் போலிருந்தது. அதனால் தொடர்ந்தேன்..."

தொடரும்

# எங்கள் திட்டம் ஒரே ஒரு திட்டமே!

"கட்டை வண்டியை மாட்டுக்குப் பதிலாக, மனிதன் இழுப்பதை இங்கு சென்னையிலே பார்க்கிறோம்; அவர்கள் தங்குவதற்கு ஒரு குடிசையும் இல்லாமல் பாதை ஓரத்திலே படுத்துறங்குவதைப் பார்க்கிறோம். இன்னும் சின்னஞ்சிறு குடிசையிலே ஆணும் பெண்ணும், முதியவர்களும், பச்சிளங் குழந்தைகளும் ஒன்றாக வசிப்பதைப் பார்க்கிறோம். இந்த நிலைமை மாற வேண்டும் என்று நாம் சொல்லுகிறோம், ஆனால் அமைச்சர் சுப்பிரமணியம் சொல்லுகிறார், 'தி. மு. கழகத்துக்காரர்கள் சட்டசபைக்கு வந்தால் நல்ல திட்டங்களைச் சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்தேன்; ஆனால் ஏமாந்தேன்'—என்று!

"நாம் சொல்லும் திட்டம் எல்லாவற்றையும் உள்ளடக்கிய திட்டமாகும்.

"வெற்றிலை பாக்கு கொடு என்றால், சுண்ணாம்பையும் அதனுடன் சேர்த்துத்தான் கேட்பார்களே தவிர, 'சுண்ணாம்பு கேட்கவில்லையே' என்றால், என்ன அர்த்தம்?

"வந்த விருந்தாளிக்கு 'சாதம் போடு' என்று மனைவியைப் பார்த்துக் கணவன் சொன்னால், அந்த மனைவி, இலையில் வெறும் சாதத்தை மட்டும் வைத்துவிட்டு, நின்றால் என்ன பொருள்?

"அதைப்போல, ஆட்சியிலிருப்போர், 'திட்டம் சொல்லு' என்று பன்னிப் பன்னி எங்களைக் கேட்டால், அதற்கு என்ன பொருள்?

"நாங்கள்தான் சொல்லி விட்டோமே — 'திராவிட நாடு விடுதலை பெறச் செய்வதுதான் எங்கள் திட்டம்' என்று! திராவிட நாடு பிரிவினைத் திட்டத்தில் எல்லாத் திட்டங்களும் அடங்கியிருக்கின்றன."

—அறிஞர் அண்ணா

இலட்சியவாதி

(மாதமிருமுறைத் தமிழ் ஏடு)

- பத்திரிகையுலகிற்கோர் புதுமை!
- தொழிலாளர்கட்கோர் தனித்தமிழ் ஏடு!!
- மற்றையோருக்கு மதுரத் தேன் கூடு!!!

மே திங்கள் 15-ந் தேதி முதல்

வெளிவருகிறது.

கௌரவ ஆசிரியர்: நாஞ்சில் கி. மனோகரன் எம். ஏ.

ஆசிரியர்: அன்புதாசன்

விவரங்கட்கு;

இலட்சியவாதி—1, வெள்ளாளத் தெரு, சென்னை—7

## வைராக்கியம்

*[5-ம் பக்கத் தொடர்ச்சி]*

"அது என் விஷயத்தில் அல்ல! எனது வைராக்கியம் எஃகு போன்றது! அதை யாராலும் உடைக்க முடியாது! நீங்கள் எல்லாம் பார்த்துக்கொண்டுதான் இருங்களேன்!" என்றாள் ஜமுனா!

"காலமெல்லாம் கன்னியாகவே இருக்கப் போறியா? அப்படின்னா நாளையிலிருந்து இவளை 'கன்னி' என்று கூப்பிடுங்கடி!" என்றாள் அம்பிகா.

"நீங்க எப்படிக் கூப்பிட்டால்தான் எனக்கு என்ன? நான் கன்னியாகவே—முகராத முல்லையாகவே — மீட்டாத வீணையாகவே இருந்து சாகப் போகிறேன்! இது உறுதி! உறுதி!..."

"ம்...அப்புறம்?..."

"...விழுப்புரம்!..."

"வாங்கடி...... 'மானிட்டர்' வர்ரார்...வேலையைக் கவனிக்கலாம்!"

உடனே டெலிபோன் போர்டில் கண்களைப் பதித்து—கைகளை ஓட விட்டு —பணியைச் செய்யத் துவங்கினர் அந்த அழகு மங்கையர்!

'டெலிபோன் எக்சேஞ்ச்' ஓய்வு அறையில் இவ்வளவு நேரமாக நடந்த விவாதம் ஒருவழியாக முடிவுற்றது. அன்றையிலிருந்து ஜமுனாவை எல்லோரும் 'கன்னி', 'வர்ஜின்' என்றே அழைக்க ஆரம்பித்தார்கள். அதைப்பற்றி அவள் கவலை கொள்ளவே இல்லை! ஏனெனில் அவள் மட்டும் தனியாக இல்லையே இப்போது! எப்போதும் பக்கத்திலேயே பணிபுரியும் சரசாவும் அவளுக்குத் துணையல்லவா? அந்தத் 'திருமண எதிர்ப்பு இயக்க'த்தில் அவர்கள் இருவர் மட்டுமே உறுப்பினர்கள்! அந்த 'இரட்டையர்' பெண்கள் மணம் புரிந்து கொள்ளத் தேவையில்லை என்பதற்கு ஆணித்தரமான ஆதாரங்களை அள்ளி அள்ளி வீசி, மற்றவர்களைத் திக்குமுக்காடச் செய்தனர்.

பதில் சொல்ல முடியாதவர்கள் அவர்கள் இருவரையுமே 'டெலிபோன் எக்சேஞ்சின் வாயாடிகள்' என்று சொல்லித் தப்பினார்கள்.

•

திடீரென்று ஒருநாள்...சரசாவை பெங்களூருக்கு மாற்றி விட்ட காரணத்தால், அவள் தன் தோழிகளை எல்லாம் பிரிய மனமின்றிப் பிரிந்து, பயணமானாள். பெங்களூர் மெயிலில் வழியனுப்பி வைக்க 'டெலிபோன் எக்சேஞ்சி'ன் ஒரு பகுதியே சென்றிருந்தது. சரசா எல்லோருடனும் பேசியதைவிட ஜமுனாவிடம் அதிகமாக உரையாடினாள்.

"சரசா! நம்ம வைராக்கியத்தை மறந்துடாதே!" என்று ஜமுனா நினைவூட்டினாள்.

"ஏண்டி ஜமுனா!... நம்ம வைராக்கியத்தை எப்படியடி நான் மறப்பேன்? கல்யாணம் கனவிலேகூட நடக்காது எனக்கு! நீ மறந்து விடாதே!"

"நான் மட்டும் எப்படி மறப்பேன்? அந்த இயக்கத்தின் தலைவியே நான் அல்லவா?..." என்றாள், ஜமுனா.

இரயில் புறப்பட்டது; ஏனோ சரசாவின் கண்களில் நீர் துளிர்த்தது!

•

காலம் மெதுவாக கானம் பாடி பறந்து கொண்டிருந்தது...இரண்டாண்டுகள் எப்படியோ உருண்டோடி விட்டன.

ஒருநாள் மாலை ... கதிரவன் மேற்கு வாயிலின் கதவுகளைத் தட்டிக் கொண்டிருந்தான். பெங்களூரில் உள்ள 'கப்பன் பார்க்'கின் மலர்க் கொத்துகள் மீது மாலைக் கதிரவன் ஒளிக் கதிர்கள் விழுந்து தங்கமாக்கிக் கொண்டிருந்தது. ஜமுனா மெதுவாக நடந்து கொண்டிருந்தாள். தென்றல் தவழ்ந்து அவளது முந்தானையோடு விளையாடிக்கொண்டிருந்தது. மலர்க் கொத்துகள் தலையசைத்து வரவேற்றன. அவள் உள்ளமும் மலர்களைப்போல மகிழ்ச்சியால் துள்ளிக்கொண்டிருந்தது. அவளது செம்பவள இதழ் ஓரத்தில் குறுநகை நெளிந்தோடியது. எங்கேயோ ஒரு கனவு உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். சுற்றுப்புறத்தை மறந்து தனக்குத் தானே மகிழ்ந்துகொள்ளும்படியாக அவளுக்கு என்னதான் அப்படி நேர்ந்தது?

"ஏண்டி ஜமுனா, இங்கே எங்கேடி வந்தே?"—எங்கிருந்தோ வந்த இந்தக் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள் ஜமுனா. சரசா பின்னால் நின்று கொண்டிருந்தாள்!

"சரசா..."—நீண்ட நாளைய தோழியைப் பார்க்கும் ஆவல் ஜமுனாவுக்கு. இருவரது கரங்களும் ஒன்றை ஒன்று பின்னிக் கொண்டன.

"ஆமாண்டி நானேதான்...!"—என்று மகிழ்ச்சிப் பெருக்கால் கூறினாள் சரசா.

அவளுக்குப் பின்னாலேயே ஒரு இளைஞர் குழந்தை ஒன்றை 'கை வண்டி'யில் வைத்துத் தள்ளிக் கொண்டு வந்தார். அக்குழந்தை "அம்மா, அம்மா" என அழைத்தது. சரசா அந்த மழலை மொழிச் செல்வத்தை வாரி அணைத்துக்கொண்டாள்.

"என்னடி இது...?"

"குழந்தை...கலா!"

"என்ன; குழந்தையா?...யாருடைய குழந்தை?"—ஜமுனாவின் குரல் ஏனோ படபடத்தது.

"என் ... என் குழந்தையேதான்!"

"ஐயையோ! பாவி!...நம்ம வைராக்கியம் என்ன ஆச்சுடி?"

"வைராக்கியமாவது; மண்ணாங்கட்டியாவது, ஜமுனா! என் வைராக்கியத்தின் ரகசியம் உனக்குத் தெரியாது பெண்ணே! எங்க ஜாதியிலே தான் உனக்குத் தெரியுமேடி—நிறைய வரதட்சணை கொடுக்கணும்முன்னு ...... வரதட்சணை கொடுக்கும் அளவிற்கு நாங்கள் செல்வம் படைத்தவர்களல்லவே! ஆகவே எந்த வரனும் என்னைத் தேடி வரலே...தேடி வந்த வரனும் தானே ஓடிப் போச்சு! இதை எப்படியடி வெளியே சொல்றது? வெட்கமாகவும், வேதனையாகவும், அவமானமாகவும் இருக்காதா? அதனால்தான் நானும் முன்பு உன்னோடு சேர்ந்து கல்யாணமே செய்துக்கப்போறதில்லேன்னு சும்மா சொல்லிண்டிருந்தேன்! திடீரென்று இவர் வந்தார்; என்னை விரும்பினார்! அதனால் வரதட்சணையே வேண்டாம்; இந்த வடிவழகியே போதும்னு சொல்லிட்டார். எல்லாம் அவசர அவசரமா முடிஞ்சுட்டுடி...உனக்கு 'இன்விடேஷன்' அனுப்பாததுக்கு மன்னிச்சுடு!....போகட்டும்...... அதெல்லாம் பழைய கதை! பின் கலா பிறந்தாள்......இன்னும் எட்டு மாதத்திலே மற்றுமொரு 'நிலா'வும் பிறக்கப் போகிறது! எனக்கென்னவோ ஜமுனா, இப்போதுதான் வாழ்க்கை நிம்மதியானதா தோன்றது!...... அதிருக்கட்டும்; நீ ஏன் பெங்களூருக்கு வந்திருக்கே?..."

"பதினைந்து நாள் 'மெடிகல் லீவ்' கிடைச்சுது...வந்தேன்..."

"பரவாயில்லேடி!... நீயாவது நம்ப சபதத்தை — வைராக்கியத்தை விடாம இருக்கியே!"

"வைராக்கியமா? .......சரசா நினைவிருக்கா, ஒருநாள் கோதை சொன்னாளே, 'பெண்களின் வைராக்கியம் நீர்மேல் குமிழி போல' என்று!..."

"ஆமாம்...அதற்கென்ன?...."

"என் வைராக்கியமும்கூட புகைந்து விட்டதடி...!"

"என்ன? கல்யாணம் காராக்கிரகப் பிரவேசம் என்று கனல் கக்கப் பேசுவாயே..."

"அதெல்லாம் என் கனிவு நிறைந்த சொற்கள் பலனில்லாமல் போனதால் எழுந்த ஏக்கக்குரல்! என் வைராக்கியம் போலி வைராக்கியமடி..."

"புரியவில்லையேடி!..."

"எப்படிப் புரியும்? அது ரகசியமாயிற்றே!... உனக்குத் தெரியுமே சரசா, 'அவரை'ப் பற்றி!..."

"எவரைப் பற்றி...?"

"அடிக்கடி என்னுடன் பேசுவாரே-'டியூட்டி' நேரத்திலேயும் விடாது பேசிக்கொண்டேயிருப்பாரே—அவர்தான்!"

"ஓகோ...அவரா?..."

"நான் கூட அடிக்கடி சொல்வேனே—என் நெஞ்சில் குடியேறி இருந்த 'அவரை'ப் பற்றி! பணிபுரியும் பெண்களைக் கண்டெடுத்தும் பாரேன் என்று சொல்லிக்கொண்டிருந்தாரே; என் அத்தான்; அவர்தானடி! அவரைத்தான், நான் என் உரிமைகொண்டார் என எண்ணிக் கொண்டிருந்தேன் நீண்ட நாட்களாக. ஏனெனில் யாருக்கும் தெரியாமல் என் நெஞ்சில் நீங்கா இடம் பிடித்துக் கொண்டவர் அவர்! ஆனால் என்னை மணக்கமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தார்! நான் என்ன செய்வது? பெண்தானே; என் எண்ணத்தைவெளியே சொல்ல முடியாது தவித்தேன். வெட்கமோ—பயமோ எனக்கே புரியவில்லை! தந்தை, தாய் சொல்கின்றரே என்று நான் வேறு யாருக்கும் வாழ்க்கைப்பட விரும்பவில்லை! அதன் விளைவுதான் என் போலி வைராக்கியம்! மணமே வேண்டாம் என்றால் யார்தான் என்னை நெருங்க முடியும்?... அதனால்தான் ஆண்களை வேண்டாமென்ற ஆரவல்லிகளையே மாற்றி விடும் வசீகரமான மாரன்களும் நெருங்க முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டேன்! ஆனால், இப்போதோ என் தங்க அத்தானே என் வழிக்கு வந்து விட்டார்! அப்புறம் ஏதடி என் வைராக்கியத்திற்கு இடம்?..."—ஜமுனாவின் முகம் வெட்கத்தால் சிவந்தது!

"அப்படியா சங்கதி? எனக்குச் சிரிப்புதான் வருகிறது ஜமுனா!..."

"அநேகமாக அடுத்த மாதம் இருக்கும் திருமணம்...உன்னைப் போல் நான் மறந்து விடமாட்டேன்; 'இன்விடேஷன்' அனுப்புகிறேன்...மறந்து விடாதே! வந்து சேர்!..."

"மறக்கமாட்டேன் மிஸ் வைராக்கியம்!"

"வைராக்கியமாவது; மண்ணாங்கட்டியாவது! பெண்களின் வைராக்கியம் நீர் மேல் குமிழிபோல் — காற்றடைத்த 'பலூன்'—அது எந்த நேரமும் உடைந்துவிடும்!"

கலகலவென நகையொலி அப்பூங்காவிலிருந்து எழும்பியது!

ஃ

## கலப்படம்

"சென்னை மாகாணம் கேட்டுக் கொண்டபடி அந்த மாநிலத்திற்கான 'உருக்குக் கோட்டா'வை அதிகப்படுத்துவதற்கில்லை."

—மத்திய மந்திரி சுவரண் சிங்

இரத்தத்தையும், வியர்வையையும் 'உருக்கி' உழைக்கத்தான் தென்னாட்டு மக்கள் பழக்கப்பட்டவர்களாயிற்றே — அவர்களுக்கு ஏன் அதிகப்படியான உருக்குக் கோட்டா?

•

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் தங்கள் கட்சியின் கொள்கைகளை மாற்றிக் கொள்ளுகின்றனர்!

—அமிர்தசரஸ் மாநாட்டு முடிவு

புல்கானின் வீழ்ச்சிக்கும் இதற்கும் சம்பந்தமில்லையாம்!

•

"பிரதமர் நேரு பதவியிலிருந்து விலகிக் கொண்டு, வெளியிலிருந்து நாட்டிற்கு வழி காட்ட வேண்டும்!..."

—ஜெயப்பிரகாஷ் நாராயண்

துறவறம் பூண்ட ஜெயப்பிரகாஷுக்கு, அரசியலுக்கு வழி காட்டியது யார்—என்று கேட்கிறாராம், நேரு!

•

கல்லூரிகளிலும் பள்ளிக்கூடங்களிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் ஒன்றாய் கூடி சிறிது நேரம் பிரார்த்தனை நடத்துவது நலம் என்று மத்திய சர்க்கார் தெரிவித்த யோசனையை அஸ்ஸாம் நீங்கலாக மற்ற ராஜ்யங்கள் இதுவரை பின்பற்றவில்லை.

—மத்திய கல்வி மந்திரி

மாணவர்களுக்குத் தண்டனை கொடுக்கலாம்! ஆசிரியர்களை என்ன செய்வது?

## பிறைவானம்

### அதோ, அடிச்சுவடு!

நான் தேடித் தேடி அலைந்த அடிச்சுவடு!

என்னைத் தேடி—தவறு; தவறு; என் பிணத்தைத் தேடுவதாக எண்ணிக் கொண்டு யாரோ இவ்வளவு தூரம் வந்துவிட்டார்களே! யார் அது? என் சோதனையில் சிக்கித் தன் நற்குணத்தை நிலைநாட்டிக் கொண்டது யார்?

நானே இறந்து விட்டேன்! அதுவும் சாதாரணமாக அல்ல; தற்கொலை! இது உலகில் எந்த உயிராலும் எதிர்பார்க்க முடியாத சாவு! ஏன்? நான் கோடீஸ்வரனாயிற்றே! பணத்திலேயே புரண்டு கொண்டு பத்து தலைமுறைகள் மகிழ்ச்சியோடு வாழலாமே—அவ்வளவு செல்வம் எனக்குண்டு! ஆயிரம் வேலி நிலம்—ஊரிலே இருபத்தைந்து தெருக்கள்—அங்கெல்லாம் உள்ள தொன்னூறு சதவிதம் வீடுகள்—எல்லாம் எனக்கே சொந்தம்! தங்கத் தாம்பாளத்தில்தான் சாப்பிடுவேன்; வெள்ளித் தகடு பதித்த கட்டிலில்தான் படுத்துறங்குவேன்! வைர, தங்க நகைகள் வைப்பதற்கு மட்டும், ஆச்சரியப்படாதீர்கள்—என் நான்கடுக்கு மாளிகையில் அநேக இரும்புப் பெட்டிகள் உண்டு! உலகத்து நாடுகளிலிருந்தெல்லாம் கண்களைக் கவரும் பூச்செடிகளை வரவழைத்தேன்; மனநிம்மதியின் இருப்பிடம் இதுதான் என்று பாராட்டத்தக்க பூங்காவை அமைத்தேன்!

ஆனாலும், எனக்கு மட்டும் மன நிம்மதி இல்லையே; ஏன்?

என்னைச் சுற்றி எண்ணற்றோர்—என் புகழ் பாடிக்கொண்டு எவ்வளவோ பேர்—முகத்தில் புன்சிரிப்பை வரவழைத்துக்கொண்டு என் பாதம் கழுவவும் தயார் என்று சொல்லும் தாசர்கள் கோடானு கோடி!

ஆனால், இத்தனை பேரும் யாரை நேசிக்கிறார்கள்? என்னையா? அல்லது என் பணத்தையா? இந்த சந்தேகம் என் நெஞ்சிலே தோன்றிவிட்டது! சந்தேகம் மனிதனைக் கொல்லும் வியாதியாயிற்றே! நானும் அந்தச் சுழலிலே சிக்கித் தவித்தேன்; சஞ்சலப்பட்டேன்! எப்படியும் விடை பெற்றுவிட வேண்டும் என்று குழந்தையைப் போல ஆசைப்பட்டு விட்டேன்.

என்ன செய்வது அதற்கு? யோசித்தேன்; முடிவு ஒன்று கிடைத்து விட்டது. ஆமாம்; நான் சாவதாகத் தீர்மானித்து விட்டேன்!

"எவ்வளவு பொருள் இருந்து என்ன பலன்? எனக்கு மனதிலே நிம்மதி இல்லை! ஆகவே நான் கற்கோவிலுக்கு எதிரே கடலில் விழுந்து தற்கொலை செய்து கொள்கிறேன். என் மறைவுக்கு எந்த ஒரு உயிரினமும் பொறுப்பாளியல்ல! அது என் மனப்பூர்வமான முடிவு! ஆகவே என்னை யாரும் தேடாதீர்கள்! என் பிணம்கூட மனிதர்கள் காணும்படி கடற்கரையில் ஒதுங்க வேண்டாமென்று விரும்புகிறேன். மற்றொன்று... எனது செல்வ மனைத்தையும் என் குலதெய்வமாம் 'ஜகதாம்பிகை'யின் கோவிலுக்கு எழுதி வைத்துவிட்டேன்.

—ஜமீன்தார் தங்கப்பா'

இப்படி ஒருநாள் நள்ளிரவில் கடிதம் எழுதி வைத்துவிட்டு நான் மறைந்துவிட்டேன்!

என் மறைவு குறித்து யார் உள்ளபடியே வருந்துகிறார்கள் என்று கண்டுபிடித்து விடலாமல்லவா?

அதன் பிறகு நான் பலரைச் சந்தித்தேன்; பேசுவதை செவிமடுத்தேன். ஐயோ; இதுதான் உலகமா? என்மேல் அன்பு கொண்டவர்களைப்போல பேசினார்களே; எல்லாம் நடிப்புதானா? என் சந்தேகத்திற்கு விடை கிடைத்துவிட்டது...ஒருவரும் என்னை நேசிக்கவில்லை; என் பணத்தைக் கண்டுதான் பல்லிளித்திருக்கிறார்கள்!

ஆனாலும் இத்தனை நாட்களுக்குப் பிறகு—நான் கடலில் விழுவதாக எழுதியிருந்த தனி இடத்தை நோக்கி அடிச்சுவடுகள் தெரிகின்றனவே! யாருடையவை அவை?

என் அந்தரங்கக் காரியதரிசியினுடைய அடிச்சுவடுகளோ?...

இருக்காது; இருக்காது! அவன் ஏன் இங்கு வரப் போகிறான்? அன்றைக்குத்தான் அவன் என்ன பேசினான் என்று நான் கேட்டு விட்டேனே;

"தொலைந்தான் பிடை! இருபத்தி நான்கு மணி நேரமும் என் உயிரை வாங்கிய இந்த 'யமன்' இப்போதுதான் சித்திரகுப்தனின் கண்களில் தென்பட்டான் போலும்! ஐயோ...என்ன தொல்லை கொடுத்தான்! நள்ளிரவு பனிரெண்டு மணிவரையில் குட்டிப் போட்ட பூனை மாதிரி நடந்து கொண்டே இருப்பான். கேட்டால் 'நிம்மதி இல்லை' என்பான்! நிம்மதிக்கு என்ன குறைச்சல் அவனுக்கு? இருநூறு ரூபாயுக்கு மாதம் பூராவும் அடிமையாக உழலுகிறேனே நான், என்னைப்போலவா அவன்—அமைதி இழக்க? எல்லாமே பொய்! பணம் காக்கும் 'பூத'மாயிற்றே; தூக்கம் வருமா? நானும் வேஷம் போடுவேன்; 'என்ன எஜமான் உடம்புக்கு? டாக்டருக்குப் 'போன்' செய்யவா? என்று பதறுவதுபோல் நடிப்பேன்! போகட்டும்...போகட்டும... தொலைந்தவரையில் நல்லது!...... எனக்கு இதை விட்டால் ஆயிரம் இடம்! இவன் செத்தானே என்று நான் ஏன் அழ வேண்டும்?......... போகிறேன்; போகிறேன்!...... வேலை தேட வேண்டுமல்லவா!..."

—இப்படி இருதயம் இல்லாதவன்போல் பேசினானே; அவனா என் பிணத்தைத் தேடி வரப் போகிறான்? நிச்சயம் இருக்காது!

பிறகு யாராக இருக்கும்?...ஒருவேளை, என் மாளிகையின் வேலைக்காரர்களில் யாராவது இருக்குமா?...

இது என்ன சபலம் எனக்கு? நான் மறைந்த தினத்தன்று மனம் திறந்து அவர்கள் பேசிக்கொண்டதைக் கேட்டுவிட்டேனே:

"என்னய்யா, தோட்டக்கார கணேசா! என்ன ஒரு மாதிரியா இருக்கே? ஐயா பூட்டாரேன்னு ஏக்கமா?" என்று கேட்டான் வாசல் காக்கும் வரதராசன், கேலியாக!

"ம்...மண்ணாங்கட்டி! ஏக்கமாவது; துக்கமாவது! இன்னிக்காவது தோட்டத்துக்குத் தண்ணி ஊத்த வேண்டாமேன்னு சந்தோஷம் தம்பி எனக்கு!" என்றான் தோட்டக்கார கணேசன்.

"ஆமாமாம்; இன்னிக்காவது கொஞ்சம் நிம்மதியா கீழே உட்கார முடிஞ்சதேன்னு நானும் சந்தோஷப்படுறேன்! காத்தாலேருந்து இராவுவரை நிக்கவச்சானே என்னை; அதான் 'அம்போ'ன்னு போயிட்டான்!" என்றான் பதிலுக்கு வரதராசன்!

"பாவிப் பய! கடல்ல போயி விழுந்தானே!...இருந்தாலும் நான் தப்பு பண்ணிட்டேன்! சாப்பாட்டில் கொஞ்சம் எலிப் பாஷாணத்தைக் கலந்து, அகப்பட்டதைச் சுருட்டிக்கிட்டுப் போயிருக்கணும்!...இனிமே நினைச்சு என்ன பண்ணாதீர்னு ஏதோ கவலைப்பட்டாள் சமையற்கார சாரதா!

"கடல்லதான் விழட்டும்; இல்லை கயத்துலதான் தொங்கட்டும்! இந்த மாச சம்பளத்தையும் கொடுக்காம போய்த் தொலைஞ்சுட்டானே!" என்றான் பால் கறக்கும் பரமசிவம்! அவன் பல் முளைத்த காலத்திலிருந்து கோலூன்றும் இன்றுவரை பல ஆண்டுகள் என்னிடம் வேலை பார்ப்பவன் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்!

என் உப்பைத் தின்று உடல் வளர்த்தவர்கள்—அவர்களை அன்போடு நேசித்த நான் இறந்து போனதாக எண்ணி இப்படித்தான் பேசிக் கொண்டார்கள்; இன்னும் என்னென்னவோ பேசிக் கொண்டார்கள்! நான் அன்று பட்ட வேதனை கொஞ்சமா? அதற்குப் பிறகும் என்னைத் தேடி அவர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேனே, என்ன முட்டாள்தனம் இது!

அப்புறம்...? இந்த அடிச்சுவட்டுக்கு உரியவர்தான் யார்?...நான் அதைப் பின்பற்றி நடந்தபடியே யோசித்தேன்.

ஒருவேளை, என் உயிர் நண்பர்—போலீஸ் இன்ஸ்பெக்டர் பொன்னுரங்கமாக இருக்குமோ? எப்படியும் தன் நண்பனது உடலையாவது கண்டு பிடித்துவிட வேண்டுமே என்பதற்காக கடற்கரைப் பக்கம் திரிகிறாரோ?...

இல்லை; இல்லை! அவராக இருக்கவே முடியாது!...நிச்சயம் இருக்க முடியாது! அன்றைக்கே என் மறைவு குறித்து அவர் கொண்ட எண்ணம் புரிந்துவிட்டதே:

"செத்த பாவி விஷத்தை 'கிஷ'த்தைக் குடிச்சு சாகக்கூடாதா? இப்ப அவன் பிணத்தைத் தேடணும்; கிடைச்சாலும், கிடைக்காட்டியும் மேலிடத்துக் கேள்விகளுக்கு விளக்கம் சொல்லணும்! ஒருத்தன் சாகப்போய் ஆயிரத்தெட்டு விசாரணைகள்!...கொஞ்சம் கூட நிம்மதி கிடையாதுப்பா!... ஏய் ஒன்காட்போர்!......கடற்கரை பக்கம் போய்த் தேடுங்க......அந்த கழிசடையின் அழுகின பிணம் ஒதுங்குதான்னு பாருங்க!..."

உயர் நட்பை உதாசீனம் செய்த அந்த நண்பனின் அடிச்சுவடல்ல இது!

உடன் பிறந்தவனினும் மேலாக என் சுக துக்கங்களில் அக்கரை கொண்டவன் என்று சொல்லிக் கொண்டானே; அந்த சின்னய்யாவின் அடிச்சுவடாக இருக்குமா?

எப்படி இருக்க முடியும்? அவனும்தான் அன்று தன் மனைவியிடம் இப்படிச் சொன்னானே:

"நான் ஏழையாத்தான் அழுவுறேன்னு நினைக்காதேடி! என் கண்கள்ல வர்ரது துக்கக் கண்ணீரல்ல—ஆனந்தக் கண்ணீர்! ஏன் தெரியுமா? நான் அவன்கிட்ட வாங்கின இரண்டாயிரம் ரூபாய் கடனைக் கேட்க எந்த நாதியும் இல்லை! அவன் பிணம்கூட இல்லை, நெற்றியிலே நாமத்தைச் சாத்த!"

அந்தத் துரோகியா நான் மறைந்த இடத்திற்கு வந்திருக்கப் போகிறான்? இல்லை; இல்லை!

நான் அடிச்சுவட்டின் வழியே நடந்து சென்றேன். எல்லையிலே யார்தான் இருக்கப் போகிறார்கள்? ...ஆம்...ஒருவேளை என் மகனாக இருக்குமோ?.........இருபத்தைந்து வருட காலம் வளர்த்து ஆளாக்கி விட்டேனே; அந்த அன்புச் செல்வனாக இருக்குமோ?

ஐயோ, என்ன தப்பான எண்ணம் இது; என் நப்பாசை இன்னும் தலைகாட்டுகிறதே! அன்று அவனும், ஜகதாம்பிகை கோவில் குருக்கள் ஆனந்தய்யரும் பேசிக் கொண்டார்களே-இல்லை; இல்லை; என் நெஞ்சிலே கூர் ஈட்டிகளைப் பாய்ச்சினார்களே—அதை நான் கேட்டுக் கொண்டுதானே இருந்தேன்?

"என்ன தம்பி; ஒரே சோகமா உட்கார்ந்திருக்கேள்? இப்படி வருத்தப்பட்டிண்டிருந்தா உடம்பு என்னத்துக்காகும்?...கவலையை விடுங்கோண்ணா!"

"கவலைப் படாமல் என்ன செய்யறது குருக்களய்யா! காலணாகூட எனக்கு வைக்காம எல்லாத்தையும் உம்ம கோயிலுக்கு எழுதிவைச்சுட்டுப்போயிட்டானே, பாவி!..."

"நன்னா சொன்னேள்! அவன் ஆத்மா சாந்தி யடையாதுன்னா! அப்படி துரோக புத்தி படைத்தவாளுக்கு அம்பிகை இப்படித்தான் தண்டனை கொடுப்பா!..."

"என்னைக்குச் சாவார்; இந்த சொத்துக் கெல்லாம் ஏகபோக சொந்தக்காரனாகலாமுன்னு காத்துக்கிட்டிருந்தேனே; இப்ப நான் என்ன செய்யறது?" எல்லாத்தையும் கல்லுக்குக் கொட்டி அழுதுட்டாரே!"

[தொடர்ச்சி பக்கம்—10]

## அடிச்சுவடு

தஞ்சை மாவட்ட

# தி. மு. கழக 3-வது மாநாடு

## திருவாரூர்.

அன்புடையீர் !

நமது மாவட்ட மாநாட்டிற்கான துவக்க வேலைகள் அனைத்தும் ஆரம்பமாகிவிட்டன. அழகுற மாநாட்டுப் பந்தல் அமைக்கும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. நமது மாநாட்டை சீரும் சிறப்புமாக நடத்தவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு கிளைக் கழகத்தின் கையிலுமிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

- முதல் அறிவிப்புச் சுவரொட்டிகள் அனுப்பப்பட்டு ஆங்காங்கு தட்டிகளில் ஒட்டப்பட்டு விளம்பரமாகி வருகிறது. அடுத்தடுத்து சுவரொட்டிகள் அனுப்பப்படும். அவைகளையும் பார்வையான இடங்களில் தட்டிகளில் ஒட்டி வைப்பதோடு, எடுப்பான சுவர்களில் உரியவர்களைக் கேட்டுக்கொண்டு, அழகான முறையில் ஓவிய நண்பர்களைக்கொண்டு எழுதச் செய்து விளம்பரம் செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- மே மாதம் 5-ந் தேதியன்று எல்லாக் கிளைக் கழகச் சார்பிலும் "மாநாட்டு விளம்பர நாள்" கொண்டாட வேண்டுகிறோம். அன்று காலை முதல் தோழர்கள் "மெகபோன்"—ஒலி பெருக்கிகள் மூலம் சுற்று வட்டார ஊர்கள் அனைத்துக்கும் சென்று, மாநாட்டு சிறப்பு குறித்தும், மாநாட்டில் கலந்து கொள்ளும் தலைவர்கள், கலை நிகழ்ச்சிகள் பற்றியும் எடுத்துக் கூறி அனைவரையும் கவரும் வகையில் விளம்பரம் செய்திட வேண்டுகிறோம்.

- மாநாட்டன்று காலை, திருவாரூர் புகைவண்டி நிலையத்திலிருந்து மாபெரும் ஊர்வல மொன்று நடத்த பெரு முயற்சி செய்கிறோம். ஊர்வல மெனில் இதுவரை எந்த மாவட்ட மாநாட்டிலும் இல்லாத வகையில் நமது தஞ்சையின் பெருமையை உயர்த்துவதாக அமைதல் வேண்டும். எங்கு நோக்கினும் கொடிகளாய்க் காட்சி தரவேண்டும். இலட்சிய முழக்கம் இடி முழக்கமென ஒலித்திட வேண்டும். ஒவ்வொரு கிளை [illegible] கள் ஊர்வலத்தில் ஒளிவிட வேண்டும். வட்டக் கழகங்கள் தங்கள் தங்கள் கிளைக் கழகங்களை அணி வகுத்துத் தலைமையேற்றுப் பவனிவருவது சிறப்பாக இருக்கும். சில கிளைகளில் இருந்து சிறு சிறு அழகிய தேர்கள் அலங்கரித்துக்கொண்டு ஊர்வலத்தை இன்னும் எழிலாக்கப் போவதாக ஆர்வமுடன் அறிவித்திருக்கிறார்கள். சில கிளையினர், கழகத் தலைவர்கள் படங்களை அட்டைகளில் பெரிய அளவில் தயாரித்து, அவைகளைக் கம்புகளில் இணைத்து, ஊர்வலத்தின் நடுவே உயரப் பிடித்துக்கொண்டு வருகிறோம் எனத் தெரிவித்துள்ளனர். இம்மாதிரி சிறப்புகளில் தங்கள் கிளையும் பங்கு கொள்வதோடு இதைவிட ஊர்வலத்தை எழிலாக்கும் நல்ல முறைகளைக் கையாள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம்.

- தங்களுக்கு முன்பே தந்துள்ள தகவலின்படி மாநாட்டிற்கான கிளைக்கழக நன்கொடை ரூபாய் பத்தையும் இதுவரை அனுப்பாமலிருந்தால் உடனே அனுப்பி உதவ வேண்டுகிறோம்.

- தங்களூர் மாவட்டப் பிரதிநிதி வரவேற்புக் குழு உறுப்பினராவார். அவர் மாநாட்டிற்குச் செலுத்தவேண்டிய வரவேற்புக் குழுக் கட்டணம் ரூபாய் ஐந்தையும் உடன் அனுப்பி வைத்தால் அழைப்புச் சீட்டுகள் அனுப்ப வசதியாக இருப்பதோடு, வரவேற்புக் குழு உறுப்பினர் என்பதும் உறுதி செய்யப்பட ஏதுவாக இருக்கும்.

- ஒவ்வொரு கிளையின் செயலாளரும் மற்றொரு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரும் மாநாட்டின் பிரதிநிதிகளாவர். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதும் ஒவ்வொருவரும் ரூபாய் மூன்று பிரதிநிதி கட்டணமாக அனுப்பிவைத்துத் தங்களை முன்கூட்டியே பிரதிநிதிகளாகப் பதிவு செய்துகொள்ள வேண்டும். பிரதிநிதிகள்தான் மாநாட்டுத் தீர்மானங்களை ஆலோசிக்கக்கூடிய தகுதி படைத்தவர்களாவார்கள்.

- வரவேற்புக் குழுவினருக்கும், மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் மேற்கண்ட கட்டணங்கள் செலுத்தியான பிறகு, மாநாட்டிற்கான நுழைவுச் சீட்டுக்கெனத் தனிக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்பதையும் அறிவித்துக் கொள்கிறோம்.

- ஊர்வலத்தையும் மாநாட்டு நிகழ்ச்சிகளையும் திரைப்படமெடுப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது. தஞ்சையின் எழுச்சியை-கழகத்தின் வலிவை-அனைவருக்கும் உணர்த்தும் வகையில் தங்கள் ஒத்துழைப்பை நல்கிட வேண்டுமெனப் பெரிதும் கேட்டுக்கொள்கிறோம்.

**மு. கருணாநிதி,** பொருளாளர். **என். எஸ். இளங்கோ,** வரவேற்புக்குழுத் தலைவர்.

கு. அடைக்கலம், ப. நாராயணசாமி, க நாகப்பன், அ. நடராசன், சி. கிருட்டிணமூர்த்தி, விளம்பரப் பொறுப்பு.
தோ. ப. தலைவர்கள். செயலாளர்கள்.

## பிறைவானம்...

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

—மகனா அவன்? அவனும் என் மேல் கொண்டிருந்த பாசமெல்லாம் பணத்திற்காகத்தானா? இரத்தத் தொடர்புடையவனின் இருதயத்தையும் இரும்பாக மாற்றிவிட்டதே என் சொத்து!

நீங்களே சொல்லுங்கள்; அவனா வந்திருக்கப் போகிறான்?...இருக்காது! பின் யார்தான் இந்த நேரத்தில்—இந்தத் தனியிடத்தில் நடந்து சென்றிருக்கிறார்கள்? இந்த அடிச்சுவடு யாருடையது? நான் வேக வேகமாக நடந்தேன். கடற்கரை மணற் பரப்பிலே பதிந்திருந்த அந்த அடிச்சுவடுகள் செல்லும் திசை நோக்கி ஓடினேன்!

என் மனம் படபடத்தது! இனம் தெரியாத ஒரு ஆத்திரம்—ஆவல்! உலகமே என்னை வெறுத்தது—என் பணத்தை நேசித்தது; என்னை வஞ்சித்துக் கொண்டிருந்தது. இன்று நான் அவர்களை வஞ்சித்து விட்டேன். இறந்ததாகக் கதை கட்டி, அவர்களின் இரும்பு நெஞ்சத்தைப் புரிந்து கொண்டேன்! அவர்கள் நன்றாக ஏமாந்து விட்டார்கள்!

அதோ...கடல் என் கண்களுக்குத் தென்பட்டுவிட்டது! கடற்கரையிலே ஓர் உருவம் நிற்பதும் தெரிகிறது!

யார் அது?

பத்து வயதுகூட நிரம்பப்பெறாத பாலகன் ஒருவனல்லவா நின்று கொண்டிருக்கிறான்?

அவன் என்னவோ பேசுகிறான். அவன் பின்னாலேயே நின்று கேட்கிறேன் நான்:

"ஏ, பாழும் கடலே!...உன் நிறம் தான் கருப்பு என்றால், உள்ளத்திலுமா பயங்கரக் கருமை?...நீ செய்த 'பாவம்' நீதிக்கு அடுக்குமா?...தூய நற் கொள்கைகளின் இருப்பிடமாயிற்றே அவர்! அவரை வாரி வயிற்றில் போட்டுக் கொள்ள நீ எப்படித் துணிந்தாய்? அதன் பிறகும் இப்படி அலறிக் கொண்டிருக்கிறாயே, இது நேர்மைக்கு அடுக்குமா?...ஐயோ, பணம் படைத்தும் குணம் கெடாத நல்லவரே! ...நீங்கள் எங்கே? ஏன் இந்தக் கடலுக்கு இரையானீர்கள்?...... உங்கள் பிணத்தைக்கூட இந்தப் பாவியின் கண்களில் காட்டாது பொல்லாங்கு செய்கிறதே, இந்தக் கடல்!...ஐயோ!...ஐயோ!...

"ஐயா!...கருணை மூர்த்தியே!... இந்த ஏழைச் சிறுவனின் அழுகுரல் உங்கள் செவிகளில் விழவில்லையா? அன்பு நெஞ்சம் கொண்ட அண்ணலே! என்னை ஏன் இப்படித் தவிக்கவிட்டு விட்டீர்கள்?...ஐயோ! உங்களைப் போன்ற உத்தமர்களுக்கு இந்த பரந்த உலகத்தில் இடமில்லையா?...அப்படியானால் நானும் இந்த உலகில் வாழ விரும்பவில்லை!...இதோ, வந்து விடுகிறேன்!..."

அவன் மறுகணம் கடல் நீரில் இறங்கி ஓட ஆரம்பித்தான்!

"நில்..."—நான் கத்தினேன்!

அவன் 'சடக்'கென்று திரும்பினான், என்னைப் பார்த்தான். "ஆ" என்று அலறினான்.

நான் அவன் அருகே சென்றேன். அவன் யார்? நான் உற்று கவனித்தேன். தெரிந்து கொள்ளவே முடியவில்லை!

"என்ன?......நீங்கள்......நீங்கள் யார்?...செத்தவர் மறுபடியும்...... நீங்கள்...ஐயோ...பிசாசு!...பிசாசு! ..." என்று கதறினான் அவன்.

"பிசாசுமல்ல; பேயுமல்ல!...... தம்பி! நீ யார்?"

"நீங்கள்...பின் சாகவில்லையா?... ஊரெல்லாம் சொல்லிக் கொண்டார்களே!..."

"நான் சாகவில்லை!...அதிருக்கட்டும்...நீ யார்?..."

"என்னைத் தெரியவில்லையா?..."

"இல்லையே!..."

"நன்றாக யோசித்துப் பாருங்கள்! நான்கு வருடங்களுக்கு முன்பு, அனாதையான இந்த ஏழை ஒரு கவளம் உணவுக்கும் வழியின்றி, ஊராரால் உதைக்கப் பட்டு உங்களிடம் வந்தேனே!"

"ஆமாம்..."

"அப்போது எனக்கு உயிர் தந்தீர்களே!......"

"உயிரா?...என் மாளிகை வாசலில் பிணம்போல் கிடந்த உனக்கு ஒரு கவளம் உணவு தானே கொடுத்தேன்!..."

"ஆமாம், அன்புள்ளவரே! அந்த ஒரு கவளம்தான் என் உயிரைப் பிடித்து நிறுத்தியது அன்று! என்னைச் சாக்காட்டிலிருந்து மீட்டது உங்கள் அந்த அன்புதான்! அதனால்தான் நான் பிழைத்தேன்; முயற்சியால் வாழ்கிறேன் இன்று! உங்களை — உங்கள் பேரன்பை— இரக்க சிந்தையை நான் மறக்க முடியுமா? நன்றி கெட்டப் பிறவியாக முடியுமா என்னால்?"

"நான் சாகவில்லையடா ... சாகவில்லை...!"

"ஏன்?...ஏன்?..."

"நான் தேடிக்கொண்டிருந்த அன்பு நெஞ்சம் ஒரு குழந்தையிடம் இருக்கிறதே; அதைக் கண்டு பிடிக்கத்தானடா தம்பி, இன்றுவரை சாகவில்லை!"

—என்று உணர்ச்சிப் பெருக்கால் கத்திக் கொண்டே அவர் அவனை வாரி அணைத்துக் கொண்டார்.

அந்த அன்பு நெஞ்சம் கொண்ட இருவரும் ஊருக்குள் அடியெடுத்து வைத்தது கண்டு ஊரே திடுக்கிட்டது!

—சொர்ணம்

## உலகம் எழுதிய...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

காங்கிரஸ் கலகலத்து வருகிறது; உட்பூசல்களும் ஊழல்களும் மலிந்து விட்டன இந்தியாவில் காங்கிரசின் எதிர்காலம் பெரிய 'கேள்விக்குறி'யாக மாறி விட்டது. அதனால் ஏற்பட்ட மனக் குழப்பத்தை மறக்கத் தான் இந்த ஓய்வு போலும்!

ஆனாலும், நேரு எந்த மலைச் சாரலுக்குச் சென்றாலும், அவரது காதுகளின் கர்ண பேரிகையைக் கிழிக்கும் சோகப் புலம்பல் எழும்பிக் கொண்டு தான் இருக்கும்!

எனது உடலின் ஒரு பகுதியில் இருக்கின்ற சின்னஞ் சிறு இலங்கையிலிருந்து எழும்புகின்ற குரலைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

இலங்கை வாழ் தமிழர்களுக்கும், சிங்கள மொழி வெறியர்களுக்குமிடையே அங்கு நடைபெற்று வருகின்ற போராட்டம் இன்று என் ஏகப் பார்வையை இழுத்திருக்கிறது.

தமிழ் எழுத்துக்களின்மேல் தார் பூசப்படுகிறது !

தமிழர்கள் சுட்டு வீழ்த்தப் படுகிறார்கள்!

மொழிகாக்கப் புறப்பட்டவர்கள் காராக்கிரகத்துக்குள் தள்ளப் படுகின்றனர்!

ஐயையோ! பிழைக்க வந்த நாட்டிலே இந்தப் பேதமை— பிறந்த பொன்னாடு என்ன செய்கிறது?

இலங்கை வாழ் தமிழர்கள் எழுப்புகின்ற இந்தக் கூக்குரல் அங்கிங்கெனாதபடி எங்கும் எழும்புகின்றது !

—இந்த நேரத்தில்தான் நேரு பண்டிதர் ஓய்வு பெறச் செல்லுகிறார் இரண்டு மாதம்!

என்ன செய்வது? இப்படிப் பட்ட விசித்திரப் பிரகிருதிகளையும் நான் தாங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறதே என்பதை நினைக்கும்போது என் கண்களில் நீர் துளிர்க்கின்றது! ஃ

# பொன் முட்டையிடும் வாத்து—அதைக் கொன்று விடாதீர்!

பேசும் படம் இன்று மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஒரு உன்னதமான இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறதென்பதை நாம் விளக்கத் தேவை இல்லை. கள்ளம் கபடமற்ற கிராமவாசிகளையும், நவ நாகரிகத்தின் உச்சாணிக் கொம்பில் கம்பீரமாக வீற்றிருக்கும் நகரவாசிகளையும்கூட ஒருங்கே கவர்ந்த கலை! நாளெல்லாம் பாடுபடும் பாட்டாளிகள் சில மணி நேரமாவது கவலையை மறந்து—களிப்பில் மூழ்க உதவும் சாதனம்! நாட்டின் நிலையை விளக்கும் கண்ணாடி! கலை வளர்க்கும் தொட்டில்! நாட்டு மக்களுக்குத் தேவையான நல்ல கருத்துக்களைப் போதிக்கும் அறிவுச் சாலை! எல்லாவற்றிற்கும் மேலாக இலட்சோப இலட்சம் மக்களுக்கு வாழ்வளிக்கும் ஒரு பெரிய தொழிற்சாலை!

இத்தகைய உன்னதமான தொழிற்சாலையைத் தகர்க்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறது பாரத சர்க்கார். இந்திய அரசாங்கம் வீசியுள்ள வெடிகுண்டு—இத் தொழிற்சாலையை புழுதி மேடாக ஆக்குவதோடல்லாமல் அதை நம்பி வாழும் ஆயிரக் கணக்கானவர்களின் வாழ்வையும் சாம்பல் மேடாக்கிவிடும்.

கச்சா-பிலிம் இறக்குமதியை இந்திய அரசாங்கம், வெகுவாக குறைத்து விட்டதையே நாம் குறிப்பிடுகிறோம். இந்த வெட்டு சினிமாத்தொழிலுக்கு 'வேட்டு' வைத்துவிடும்.

சென்ற ஜூன் மாதத்தில் 40 சதவிகிதம் குறைப்பதென்று டில்லி துரைத்தனத்தார் முடிவு செய்திருக்கின்றனர். இதனால் சினிமாத் தொழில் எவ்வளவு பாதிக்கப்படும் என சிறிதும் மத்தியப் பேரரசு நினைத்துப் பார்த்ததாகத் தெரியவில்லை. இதை நம்பி வயிறு வளர்க்கும் ஆயிரக்கணக்கானோரின் அடுப்பில் உலை ஏறாது. அதற்குப் பதில் அவர்களின் வாழ்விற்கே உலை வைக்கப்பட்டுவிடும் என்பதை ஏனோ உணரவில்லை இந்த அரசாங்கம்.

உலகத்தில் சினிமாத் தொழிலில் முதல் இடம் பிடித்துக் கொண்டிருப்பது அமெரிக்காவாகும். அதற்கு அடுத்த ஸ்தானத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் பெருமை இந்தியாவிற்குச் சேரும்.

இந்தியாவில் மிகப் பெரிய தொழில் நெசவுத் தொழில். அதற்கு அடுத்தது சினிமாத் தொழில். இந்திய உப கண்டத்தில் சினிமாவைப் பொருத்தவரை முன்பு கல்கத்தா முதல் இடத்திலிருந்தது. பின் பம்பாய். இன்று சென்னை மிக கம்பீரமாக கோலோச்சுகிறது; சீரும் சிறப்புமாகத் திகழ்கிறது! சென்னை தனித் தன்மையோடு திகழ்வதற்குக் காரணங்கள் உண்டு. சென்னையில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், சிங்களம், இந்தி—ஆகிய மொழிப் படங்கள் தயாராகின்றன. எனவே சென்னை அகில இந்திய பட உற்பத்தி நிலையமாக இருப்பதோடு சர்வ தேச பட உற்பத்தி ஸ்தலமாகவும் விளங்குகின்றது.

சினிமாத் தொழிலில் தென்னிந்தியா மிக வேகமாக முன்னேறி வருகின்றது. இங்கு 56 'ப்ளோர்'களில் நூற்றுக் கணக்கான படங்கள் தயாராகிக்கொண்டிருக்கின்றன. இந்த 56 'ப்ளோர்'களுக்குத் தேவையான கருவிகள் ஆகியவைகளுக்காக ஏராளமான மூலதனம் படுத்தப்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கானோருக்கு வேலையும் தந்திருக்கிறது. இவ்வளவு மகத்தான முன்னேற்றத்தை இந்தியாவின் இதர பகுதியில் காண்பதற்கில்லை. கீழே கட்டம் கட்டிப் போட்டுள்ளதில் காணும் புள்ளி விபரங்கள், இத் தொழிலின முக்கியத்துவத்தை தெளிவாக நிரூபிக்கும்.

சென்ற ஆண்டு 117 படங்கள் எடுக்கப்பட்டன. இவ்வாண்டு 244 படங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன. கச்சா பிலிம் இறக்குமதி வெட்டின் காரணமாக இப்படங்களை பூர்த்தி செய்வதற்கில்லை. இவற்றில் போடப்பட்டுள்ள பெரும் தொகை கிட்டத்தட்ட ஏழு கோடி ரூபாயாகும். இந்த பிலிம் வெட்டினால் இப்படங்களை பூர்த்தி செய்வது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. நடிகர், நடிகைகளுடன், ஸ்டுடியோக்களுடனும் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள 155 படத் தயாரிப்பாளர்களுக்கு படம் எடுக்க அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் இத்தொழிலில் போட்டுள்ள இலட்சக் கணக்கான ரூபாய்களை இழக்கத்தான் வேண்டுமா?

அரசாங்கம் சினிமாத் தொழிலில் தமாஷா வரி, ஷோ வரி, வருமான வரி, சூப்பர் வரி ஆகியவைகளைப் பெறுகிறது. தமாஷா வரி, ஷோ வரி ஆகியவை மூலம் அரசாங்கம் பெறுவது ரூ 1000க்கு ரூ. 350 ஆகும். அதாவது டிக்கட்டுகள் மூலம் தியேட்டரில் ரூ. 1000 வசூல் ஆனால் ரூ. 350—யை வரியாக அரசாங்கம் பெறுகிறது. இந்தியா முழுதும் இந்தத்தொழில் ஆண்டுதோறும் ஏறத் தாழ ரூ. 12 கோடியை வரியாக அரசாங்கத்திற்குத் தருகிறது. இதில் பெரும் பகுதியை சென்னைதான் செலுத்துகிறது.

பல்வேறு பகுதிகளுக்கு பிலிம்களும், அவை சம்மந்தப்பட்ட சுவரொட்டிகளும் மற்றவைகளும் ரயில் மூலம் அனுப்பப்படுவதால், அதன் மூலமும் அரசாங்கத்திற்கு வருவாய் கிடைக்கிறது. நட்சத்திரங்களிடமும் வரி வசூலிக்கப்படுகிறது. அது அரசாங்கத்திற்கு ஒரு கணிசமான வருவாயாகும். அது மாத்திரமல்லாமல், நேரிடையாகவோ—அல்லது மறைமுகமாகவோ 276 பல்வேறு தொழில்களும், கலைகளும் சினிமாத் தொழிலில் சம்மந்தப்பட்டிருக்கின்றன என்று அமெரிக்க வர்த்தக இலாக்கா ஆராய்ச்சிக் குறிப்பு ஒன்று கூறுகிறது. உதாரணமாக அச்சுத்தொழில், பத்திரிக்கைத் தொழில், பிளாக் செய்யும் தொழில், தையல் தொழில், ஓவியம், சங்கீதம் நடனம் முதலியவைகளைக் குறிப்பிடலாம். சினிமா மூலம் அத்தொழில்கள் வளருவதால் அவை மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்கும் வருவாயும் அதிகரிக்கிறது. இத்தகைய வளம் பொருந்திய தொழிலைப் பேணி வளர்க்க துணை புரியாமல் புதை குழியில் தள்ள திட்டமிட்டுள்ளது இவ்வரசாங்கம்!

நம்நாட்டில் தற்போது கச்சா பிலிம் உற்பத்தியாகவில்லை. ஆகவே அதை அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம்! ஆண்டுதோறும் ரூ. 2 கோடி பெறுமான கச்சா பிலிம் இறக்குமதி செய்யப்படுகிறது. அதே நேரத்தில் நமது படங்கள் இலங்கை, பர்மா, மலேயா, மற்றும் சயாம், இந்தோனேஷியா போன்ற கிழக்கு ஆசிய நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள், தென் ஆப்பிரிக்கா முதலிய தேசங்களில் திரையிடப்பட்டு திரவியம் தேடிக்கொண்டு வருகின்றன. இந்தத் தொகை கச்சா பிலிமுக்காக நாம் வெளியாருக்குத் தரும் ரூ. 2 கோடியைவிட அதிகமாகும். உதாரணத்திற்கு ஒன்றைக் கூறுவோம்.

ஒரு தமிழ்ப் படத்தை எடுக்க குறைந்த பட்சம் மூன்றரை லட்சம் ரூபாய் பிடிக்கும். இதில் கச்சா பிலிமுக்கான செலவு ரூ. 65,000. வெளிநாடுகளில் தமிழ்ப் படமொன்றுக்கு சராசரி கிடைப்பது ரூ. 1,20,000 அதாவது ஒவ்வொரு தமிழ்ப்படமும், கச்சா பிலிமுக்கு செலவு செய்யும் தொகையைவிட இரு மடங்கு அந்நிய செலவாணியை சம்பாதித்துத் தருகிறது.

அந்நிய செலாவணியை சம்பாதிக்க உதவுகிற தொழில்களுக்கெல்லாம் தாங்கள் எல்லா உதவியும் செய்யத் தயார் என இந்திய அர்சாங்கம் ஏற்கனவே வாக்களித்திருக்கிறது. அவ்வாறு அந்நிய செலாவணியைச் சம்பாதிக்கும் படத் தொழிலுக்கு அரசாங்கம் உதவி அளிப்பதற்கு பதிலாக உபத்திரவம் அளிக்க முன் வந்திருப்பதைக் கண்டு நாம் வியப்புறாமலிருக்க முடியவில்லை. அரசாங்கத்தின் இந்த விபரீதப் போக்கைக் கண்டு நாடே சிரிக்கும்.

சினிமா படத் தொழிலுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிப்பதுதான் தங்கள் கருத்து என்பதை ஆளவந்தார்கள் பல முறை பறைசாற்றியுள்ளார்கள். இத் தொழிலிலிருந்து தங்களுக்குக் கிடைக்கும் வரும்படியை உத்தேசித்தும் அத்தொழில் மேன்மேலும் செழிப்பதில் தங்களுக்கும் சிரத்தை உண்டென்று சமீபத்தில் சென்னை நிதி அமைச்சர் குறிப்பிட்டார். ஆனால் மத்திய சர்க்கார் இந்தப் 'பேரிடி'யை வீசியிருக்கிறது. படத் தொழில் மீது! இதில் அதிகமாக பாதிக்கப்படுவது சென்னை மாநிலம் தான்!

நாட்டின் உன்னதக் கலை-பலருக்கு வேலை தரும் தொழிற்சாலை—இந்த பிலிம் வெட்டினால் மிகவும் பாதிக்கப்படும். ஆயிரக் கணக்கானோர் வேலையை இழக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். ஆயிரக் கணக்கான ரூபாய் வரும்படியை அரசாங்கமும் இழக்கும். நாட்டு மக்களுக்கு இன்பம்அளிக்கும் இக்கலை சீரழிந்து விடும். ஆகவே அரசாங்கம் இவைகளை எல்லாம் சீர் தூக்கிப் பார்த்து இந்த சீர்கெட்ட உத்திரவை அமுலாக்காமல் இருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம், கலையின் பெயரால்—ஆயிரக் கணக்கானோரின் வாழ்வின் பெயரால்!

—'தாரகை'

## தென் இந்தியாவில் எடுக்கப்பட்டுள்ள படங்கள்

| வருடம் | தமிழ் | தெலுங்கு | மலையாளம் | கன்னடம் | இந்தி | சிங்களம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1952 | 31 | 25 | 11 | 1 | 5 | — | 73 |
| 1953 | 45 | 31 | 7 | 7 | 2 | — | 92 |
| 1954 | 39 | 28 | 9 | 11 | 2 | 5 | 94 |
| 1955 | 46 | 24 | 7 | 15 | 5 | 4 | 101 |
| 1956 | 50 | 27 | 5 | 14 | 5 | 6 | 107 |
| 1957 | 46 | 36 | 7 | 14 | 6 | 8 | 117 |
| எடுக்கப்பட்டு வருபவை | | | | | | | |
| 1958 | 166 | 50 | 6 | 10 | 8 | 4 | 244 |

# திகைப்பூட்டும் மூன்று செய்திகள்!

ஜமீன்தார்கள்!

ஆங்கிலேயர் கொலு மண்டபத்தில் வீற்றிருந்த அலங்கார பொம்மைகள்!

பறங்கியரின் பாதங்களைப் பூஜித்து, படாடோப வாழ்வு நடத்தி வந்த நச்சுப் பூச்சிகள்!

பட்டாடை கலையாமல், பெருத்த வயிறு குலுங்காமல், பாமர மக்களின் உதிரத்தை உறிஞ்சி உல்லாச வாழ்வு வாழ்ந்து, நாட்டின் செல்வத்தைச் செல்லரித்த சல்லாப சுந்தரர்கள்!

அத்தகைய 'மூட்டைப் பூச்சிகளை' — 'இரத்தம் உறிஞ்சும் அட்டைகளை' ஒழித்துக் கட்டிவிட்டோம்—உல்லாச உப்பரிக்கையில் கோலோச்சிக் கொண்டிருந்த கோமான்களைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டோம்-அவர்கள் ஆடம்பர வாழ்விற்கு சாவுமணி அடித்துவிட்டோம்–என்றெல்லாம் தேசியத் தோழர்கள் தங்களது முதுகைத் தாங்களே தட்டிக்கொண்டு மேடைதோறும் உரத்தக் குரலில் கூறி பெருமைப்பட்டுக் கொள்ளுகிறார்கள்! ஏதோ மகத்தான காரியத்தைச் செய்துவிட்டதாக தலைநிமிர்ந்து நிற்கின்றனர். எதிர்க்கட்சியினர்மீது ஏளனப் புன்னகையை வீசுகின்றனர்!

ஆனால் அவர்களின் நிலை, மலையைக் குடைந்து எலி பிடித்தக் கதையாக இருப்பது அவர்களுக்கே புரியவில்லை.

இதுவரை இந்தியா முழுவதிலுமாக ரூ. 82 கோடி வரை ஜமீன்தாரர்களுக்கு நஷ்ட ஈடாக வழங்கப்பட்டிருக்கிறதாம். நஷ்ட ஈடாகவும், புது வாழ்வு மானியமாகவும் தரப்பட வேண்டியிருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருப்பது ரூ. 614 கோடியாம்!

உ. பி. மாநிலத்தில் இதுவரை ரூ. 25.9 கோடி, சென்னை ரூ. 2.77 கோடி, ஆந்திரா ரூ. 4.3 கோடி, பீகார் ரூ. 1.55 கோடி என்ற அளவில் ஜமீன்தாரர்களுக்கு நஷ்ட ஈடாகத் தரப்பட்டிருக்கிறதாம். "ஆங்கிலேயர் இந்த நாட்டை விட்டு ஓடி, செங்கோட்டையிலே நமது மூவர்ணக் கொடி பறக்குமேயானால், இந்நாட்டின் செல்வத் தொட்டியில் தவழ்ந்து கொண்டிருக்கும் ஜமீன்தார்களை—மிட்டாதார்களை — ஒழித்துக் கட்டியே தீருவோம். அவர்களின் கேளிக்கைகளுக்கும், உல்லாச விருந்துகளுக்கும் உலை வைத்தே தீருவோம்!" என்று உரத்தக் குரலில் கூறிய தேசியத்தார்தான் ஜமீன்தார்களுக்கு 614 கோடி ரூபாயை காணிக்கையாகக் கொட்டப் போகிறார்கள்!

இதுதான் இவ்வரசாங்கம் ஜமீன்தார்களை ஒழித்துக் கட்டிய இலட்சணம்!

ஏழைகளின் குடிசைகள் சரியச் சரிய மாளிகைகளை அடுக்கடுக்காக எழுப்பியவர்களுக்கு நஷ்டஈடு!

ஏழைகளின் எலும்புகளை படிக்கட்டுகளாக அமைத்து அவர்களின் உதிரத்திலே ஜலக்கிரீடை செய்த ஜமீன்தார்களுக்கு நஷ்டஈடு!

பரம்பரை பரம்பரையாகப் பாமர மக்களின் வாழ்வை நசுக்கி, பளிங்கு மண்டபத்தை அமைத்துக் கொண்டவர்களுக்கு நஷ்டஈடு!

உழைக்காமல், பிறரின் உழைப்பால் தழைத்து, உண்டு கொழுத்து, ஊதாரிகளாய்—உல்லாச புருஷர்களாய் — நடமாடிய நாகங்களுக்கு நஷ்டஈடு!

மது போதையிலே மயங்கி—மாது சிரோன்மணிகளின் மடியிலே கொஞ்சி விளையாடி—கேளிக்கைக் கூடாரங்களில் ஏழைகளின் கண்ணீரை—இரத்தத் துளிகளை—மலராகத் தூவி வாழ்ந்த வீணர்களுக்கு நஷ்டஈடு!

நாட்டில் உள்ள நல்லவர்களே! நாம் கொட்டித் தரும் வரிப்பணம் எப்படி விரயமாகிறது என்பதைச் சற்று கவனியுங்கள்!

இந்த நாட்டின் 'புண்'களாக இருந்த மகாராஜாக்கள் சிலரைக் கவர்னர்களாக்கிய இவ்வரசாங்கம் குட்டி மகாராஜாக்களை சும்மா விட்டுவிட முடியுமா? அதற்காகத்தான் இந்த வாய்க்கரிசியை அவர்களுக்குப் போடுகிறார்கள் போலும்!

அதுமட்டுமா? இந்த நஷ்ட ஈடு கொடுக்காவிட்டால் இந்த அரசாங்கத்திற்கு மகத்தான நஷ்டம் வந்துவிடுமே, தேர்தல் காலத்தில்! ஆகவே இந்த நஷ்ட ஈடு தேர்தல் காலத்தில் இந்த மாஜி ஜமீன்தாரர்கள் (பெயரளவில்தான்) உதவியைப் பெறுவதற்காக அளிக்கப்படும் அட்வான்ஸ்—முன்பணம்! 'இலஞ்சம்' என்றுதான் நாம் கருதிட வேண்டியிருக்கிறது.

●

நேரு இரண்டு மாதம் இமாசலப் பிரதேசத்தில் ஓய்வு எடுத்துக் கொள்ளப் போகிறாராம்!

இச்செய்தி பத்திரிகைக்காரர்களுக்கு பெரிய செய்தியாகவும் மற்றவர்களுக்கு அதிசயச் செய்தியாகவும் இருக்கிறது!

தேசியத்தாரின் வட்டாரத்தில் ஒரு பரபரப்பையும், உலக அரங்கில் சல சலப்பையும் இச்செய்தி ஏற்படுத்தி இருப்பது என்னவோ, உண்மைதான்!

ஆனால் நேருவின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டு வருபவர்களுக்கு இந்த 'திடீர் அறிவிப்பு' அச்சத்தையோ, ஆச்சரியத்தையோ விளைவிக்கவில்லை!

இத்தகைய திடீர் அறிவிப்புகளை — 'வெத்து வேட்டு'களை விட்டு இரண்டொரு நாள் பரப்பரப்பான செய்தியாக்கி விடுவார் பண்டித மோதிலாலின் மைந்தர்!

அதற்குப்பின் ஒரு காரணத்தையும் கற்பித்து தத்துவ விளக்கத்தையும் தருவார்—சில நேரங்களில் 'அதிர்ச்சி வைத்தியம்' என்று ஒரு 'அணு குண்டை' சர்வ சாதாரணமாக வீசுவார். இது அவரது வாடிக்கையான செய்கை—வேடிக்கையான நடவடிக்கை.

ஆனால் இம்முறை எந்த அரசாங்க அலுவல்களையும், அன்றாட பணிகளையும் கவனிக்காமல் இரண்டுமாதம் ஓய்வு எடுத்துக்கொள்ளப் போவதாகவும், அவரது பணிகளை பந்த் கவனித்துக்கொள்வாரென்றும் விஷயம் அறிந்த வட்டாரம் கூறுகிறது!

"நேருவுக்குப் பின் யார்?" என்ற வினாவை அறிஞர் அண்ணா அவர்கள் சென்னையில் நடைபெற்ற முதல் தி. மு. க. மாநில மாநாட்டில் எழுப்பினார். இன்று அதே கேள்வியை பலரும் கேட்கின்றனர். ஒரு வேளை யாரையாவது தயார் செய்வதற்காக இந்த ஒத்திகை நடக்கிறதோ, என்னவோ?

"என்னுடைய இறுதி காலத்தை இமாசலத்தின் சரிவில் கழிக்கப்போகிறேன்" என்று அடிக்கடி கூறி வருகிறார் நேரு. ஒரு சமயம் இந்த ஓய்வு தேடு படலம் அந்திம காலத்தில் இமயமலைச் சாரலில் பர்ணச்சாலை அமைக்க இப்போதே இடம் தேடவும் இருக்கலாமல்லவா?

●

இந்த நேரத்தில் அரசியல் துறவி ஜெயப்பிரகாஷ் நாராயண், பிரதமர் நேரு பதவியை விட்டு விலகி, அப்பதவிக்கு வேறொருவரை அவரே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ஒரு வெடி குண்டை வீசியிருக்கிறார். அதுமாத்திரமல்ல; பி. சோ. கட்சியும் காங்கிரசில் இணைந்துவிட வேண்டும் என்ற 'அரிய' யோசனையையும் வெளியிட்டுள்ளார்.

ஜெயப்பிரகாஷ் நாராயண் ஒரு விசித்திரமான அரசியல்வாதி. அரசியலில் நான் தலையிடமாட்டேன்; அரசியல் துறவறம் பூண்டு விட்டேன்; பூமிதான இயக்கத்தில் பரிபூர்ணமாக உழைக்கப்போகிறேன்; அன்றாட அரசியல் 'ஆருடம்' கணிக்கப்போவதில்லை— என்றெல்லாம் கூறுவார். பின் அரசியலில் தலையை நுழைத்து, சிக்கித் தவிப்பார். அதைப்போலவே இம்முறையும் இரண்டு யோசனைகளைக் கூறியிருக்கிறார்.

நேரு பதவியிலிருந்து விலகி, வேறு ஒருவரை அவரே அமர்த்த வேண்டும் என்பது ஒன்று!

அவர் சம்பந்தப்பட்ட பி. சோ. கட்சி காங்கிரசில் இணைய வேண்டும் என்பது இரண்டாவது!

இந்த இரண்டையும் ஆராயும் போது சில ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி ஒன்று நினைவுக்கு வருகிறது!

'அரசியல் துறவறம் பூணப் போகிறேன்' என்று ஜெயப்பிரகாசர் ஜெயபேரிகை கொட்டிய நேரத்தில், நேரு அவரை அழைத்து, பேச்சு வார்த்தை நடத்தினார். மத்தியப் பேரரசில் மந்திரிப் பதவியை ஏற்றுக் கொள்ளும்படி நேரு வற்புறுத்தினார் என்றுகூட செய்திகள் வெளியாயின!

இன்றுகூட 'நேருவுக்குப்பின் ஜெயப்பிரகாஷ்' என்று சில வெளிநாட்டுப் பத்திரிகைகள் எழுதுகின்றன!

காலம் கடந்தாலும், உங்கள் யோசனையை இன்று நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று நேருவுக்குக் கூறாமல் கூறுகிறாரோ, என்னவோ ஜெயப்பிரகாஷ்! 'நான் பூண்டது அரசியல் துறவறம்தானே தவிர; மந்திரி பதவித் துறவறமல்லவே' என்று அவர் நீண்ட விளக்கத்தை வெளியிட்டாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை! எந்த புற்றில் எந்த பாம்பு இருக்குமோ?

ஃ

## நீங்காத கிரகணம்...

[4—ம் பக்கத் தொடர்ச்சி]

ஆட்சி பீடத்திலே அலங்கோலம்—காரணம் ஊழல்!

நிர்வாகத்திலே அநியாயம்—காரணம் அங்கும் ஊழல்!

இப்படி உன்னத இலட்சியத்திற்கென்று தோன்றிய இயக்கம் கை வைக்கும் இடமெல்லாம் மெய் சிலிர்க்கும் வண்ணம் தோல்வியாக மாறுகிறது!

"நாம் நம்மை மறந்து விடுகிறோம்! நம்மைக் காப்பாற்றிக் கொள்ள மறந்து விடுகிறோம்" — என்கிறார் தேபர், சூரிய கிரகணம் பற்றி குறிப்பிடும்போது!

ஆமாம்; காங்கிரஸ் என்ற ஆதவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் மறந்து விட்டது—ஊழல் என்ற 'ராகு' பலத்துடன் விழுங்க வருகிறது!

கற்பனைப் புராணத்திலே ராகு சூரியனை விழுங்கி விட்டு விடும்!

ஆனால் தேசியத்தார் புராணத்திலே ஊழல் காங்கிரசை விழுங்கும் — ஆனால் விட்டு விடாது!

ஆமாம்; இது நீங்காத கிரகணம்!

ஃ

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, தமிழ்நாடு, சென்னை-6